# தமிழ்நாட்டு எல்லைப்போராட்டம்: பெரியாரும் ம.பொ.சி.யும்

**பெரியார்**

வெளியீடு:
**பெரியார் திராவிடர் கழகம்**
95, டாக்டர் நடேசன் சாலை,
அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-600004.
தொலைபேசி: 044-24980745
periyardk@gmail.com

## நூல் கிடைக்குமிடங்கள்


பெரியார் படிப்பகம்
பேருந்து நிலையம் அருகில்
மேட்டூர் அணை - 636 401
9786316155

பெரியார் படிப்பகம்
அரசு விரைவுப் பேருந்து நிலையம்
காந்திபுரம் - கோவை
9843323153

பெரியார் படிப்பகம்
தோழர் பத்ரி நாராயணன் நினைவு நூலகம்
73 / 1 இலாயிட்ஸ் சாலை
சென்னை - 14
044.30228213

இராவணன் படிப்பகம்
இராதாகிருட்டிணன் நகர்
அரியாங்குப்பம்
புதுச்சேரி - 7
9443045614

பெரியார் புத்தக நிலையம்
மெக்டனால்டு சாலை, கண்டோன்மெண்ட்,
ஸ்டேட்பேங்க் மண்டல அலுவலகம் எதிரில்
திருச்சி - 620001
9865596940

**நன்கொடை: ரூ.30.00**

விமர்சனங்களை அனுப்ப - periyardk@gmail.com

மின் நூலாகத் தரவிறக்கம் செய்ய
www.periyardk.org

பதிப்பு ஆண்டு : 2012 ஜனவரி


## முன்னுரை

*தேவி குளம், பீர்மேடு பகுதிகளை தமிழ்நாட்டுடன் இணைக்க வேண்டும் என்று போராடிய ஒரே தலைவர் ம.பொ.சிவஞானம் (ம.பொ.சி.) என்றும், பெரியார், அதற்கு ஆதரவு தரவில்லை என்றும், சிலர் பேசவும், எழுதவும் புறப்பட்டுள்ளார்கள். 'திராவிட' கட்சிகள், மலையாளிகள், கன்னடர்கள், தெலுங்கர்களோடு சமரசம் செய்து கொண்டு தமிழர்களுக்கு துரோகம் செய்துவிட்டதாகவும் பேசி வருகிறார்கள். இந்த நிலையில் தேவிகுளம், பீர்மேடு பகுதிகளை (இப்போது கேரளாவில் அடங்கியுள்ள பகுதிகள்) தமிழகத்தோடு இணைக்க வேண்டும் என்ற போராட் டத்தில் ம.பொ.சிக்கும் தனக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தை களை விரிவாக விளக்கிப் பெரியார் 29.1.1956 ஆம் ஆண்டு வேலூரில் நிகழ்த்திய சொற் பொழிவை இங்கு வெளியிடு கிறோம். பெரியாரின் இந்த பேச்சு, பல உண்மைகளை வெளிச்சப் படுத்துகிறது.*

*1953 ஆம் ஆண்டு ஆந்திர மாநிலம், மொழியடிப்படையில் பிரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தமிழ்நாட்டிலும் அப்படி ஒரு கோரிக்கை வந்துவிடும் என அஞ்சிய இந்திய தேசிய பார்ப்பனர்கள், தமிழ்நாடு, கன்னடம், கேரளா என்ற மூன்று மாநிலங் களையும் ஒருங்கிணைத்து 'தட்சிணப் பிரதேசம்' என்ற அமைப்பை உருவாக்கத் திட்டமிட்டனர். தமிழர்களுக்கு தனிநாடு கோரிக்கையை வலியுறுத்தி வந்த பெரியார், 'தட்சிணப் பிரதேசம்' கொண்டு வரும் முயற்சிகளைக் கண்டு கொதித்தெழுந்து, அதை முறியடித்தே தீர வேண்டும் என்று தீவிரமாக களமிறங்கினார். தேவிகுளம், பீர்மேடு பகுதிகளை மீட்க வேண்டும் என்ற கோரிக்கையை ஆதரித்தாலும், அதை விட பேராபத்து, 'தட்சிணப் பிரதேசம்' உருவாக்கும் முயற்சியே என்பதை பெரியார் எடுத்துக்காட்டி எச்சரித்தார். தனக்கும் ம.பொ.சிக்கும் இது தொடர்பாக நடந்த பேச்சு வார்த்தை - கடிதத்*

தொடர்புகளையும் பெரியார் இந்த உரையில் விரிவாக விளக்கியுள்ளார்.

எல்லைப் பகுதிக்கு கிளர்ச்சி செய்வதற்கான போராட்டத்திற்கு பெரியாரின் ஆதரவை ம.பொ.சி கேட்ட போது பெரியார், வெறுமனே எல்லைப்பகுதிக்கானக் கிளர்ச்சியாக மட்டுமில்லாது கீழ்க்காணும் 5 கோரிக்கைகளையும் முன் வைத்து போராட வேண்டும் என கூறுகிறார்.

1. தமிழக எல்லைப் போராட்டம்

2. இந்தித் திணிப்புக்கு எதிர்ப்பு

3. மாநிலங்களுக்கு முழு அதிகாரம்

4. சென்னை ராஜ்யம் என்ற பெயரை 'தமிழ்நாடு' என்று பெயர் மாற்றம்

5. தென் மண்டலம் (தட்சிணப் பிரதேசம்) அமைப்பதற்கு எதிர்ப்பு

முதலில் இதனை ஏற்றுக் கொண்ட ம.பொ.சி., பின்னர் பெரியாருக்கு எழுதிய முதல் கடிதத்திலேயே 5-இல்

1. தமிழக எல்லைப் போராட்டம்

2. தமிழகம் என்ற பெயர் மாற்றம்

3. இந்தித் திணிப்பை எதிர்ப்பது

ஆகிய 3 கோரிக்கைகளை மட்டும் ஏற்றுக்கொள்வ தாக கூறுபவர், இறுதியில், பின்னிரண்டையும் கூட கைவிட்டுவிட்டது புரிந்துகொள்ள வேண்டிய ஒன்றாகும். அதிலும், சென்னை ராஜ்யம் என்ற பெயரை 'தமிழ்நாடு' என்று பெயர் மாற்றும் கோரிக்கையைக் கூட புறந்தள்ளி விட்டு எல்லைப் போராட்டம் என்று மட்டும் சுருங்கிக் கொண்டுள்ளார். தனது மறுமொழிக் கடிதத்திலும் கவனமாக தமிழ்நாடு என்ற சொல்லை கூட 'தமிழகம்' என்று மாற்றியே குறிப்பிட்டுள்ளார்.

குத்தூசி குருசாமி எழுதிய கடிதத்தில் மாபொ.சி 'நம்முடைய கருத்து மத்திய சர்க்காரை எதிர்ப்பது ம ம.பொ.சி கருத்து காமராசரை எதிர்ப்பது' என்று குறிப்பிட்டுள்ளபடியே தமிழர்க்கு பெருங்கேடான 'தட்சிணப் பிரதேச'த்தைக் கூட, இராஜாஜி ஆதரிக்கிற காரணத்தால் அக்கோரிக்கையை முதலிலேயே கைவிட்டு விடுகிறார் போன்ற செய்திகளை இச்சொற்பொழிவு தெற்றென விளக்கும்.

பெரியாரின் 'சென்னை நகரம்' பற்றிய சொற் பொழிவும், 'தமிழ்நாடு' பெயர் மாற்றம் பற்றிய தமிழ் நாடா? சென்னை நாடா? என்ற அறிக்கையும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், மலையாள ஆளுகையில் இருந்த தமிழ்ப்பகுதிகளை மீட்கும் போராட்டத்தைத் தலைமையேற்று நடத்திய மார்ஷல் நேசமணி அவர்கள் வாழ்க்கை வரலாற்று நூலின் முன்னுரை, அவர் பெரியாரின் மீது வைத்திருந்த பெருமதிப்பை வெளிப் படுத்தும் ஒன்றாகும்.

இவற்றைத் தொடர்ந்து இந்நூலில் வெளியிடப் பட்டுள்ள ம.பொ.சி.யின் மேற்கோள்கள், அவரது முரண்பாடுகள், இந்திய தேசிய ஆதரவு, இந்திமொழி ஆதரவு நிலைப்பாடுகள் ஆகியவற்றை வெளிப் படுத்துபவை ஆகும்.

27.1.1956 அன்று மாலை ம.பொ.சி கூட்டிய கூட்டத் திற்கு தான் வருவதாக இல்லை என்று கூறி புறக்கணித்து விட்ட பெரியார், 29.1.1956-லேயே முழு விவரங்களையும் வெளியிட்டு இச் சொற்பொழிவை ஆற்றியுள்ளார். ஆனால் இதற்கான மறுப்பையோ, விளக்கத்தையோ ம.பொ.சி. இறுதி வரை வெளியிடவே இல்லை.

**– பெரியார் திராவிடர் கழகம்**

## தட்சிண பிரதேசம் அமைக்கப்படுமாயின் கடும்போர் துவங்கும்!

## ஆட்சியாளர் திடுக்கிடத் தக்க திட்டம் தயார்!

## தமிழ்நாட்டின் சுதந்தரம் பறிபோக விடமாட்டேன்!

# பெரியார் போர்ப்பரணி!

29.1.56 ம் தேதி மாலை 6 மணிக்கு வேலூர் டவுன் ஹாலில் நடைபெற்ற திராவிடர் கழக பொதுக் கூட்டத்தில் பெரியார் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு

### தமிழ்நாட்டுக்கு மத்திய அரசாங்கம் இழைக்கும் கொடுமை

தமிழ் நாட்டிற்கு இந்திய அரசாங்கம் இழைத்துவரும் கொடுமைகளைக் கவனித்தால் மிகவும் முக்கியமாக நான்கைந்து விஷயங்களில் நாம் கிளர்ச்சி செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். அவைகளில் ஒன்றாக தமிழ்நாட்டுடன் இணைக்கப் பட வேண்டிய தமிழர்கள் பெரும்பான்மையும் வசித்துவரும் தேவிகுளம் - பீர்மேடு போன்ற பகுதிகளைத் தமிழ் நாட்டுடன் சேர்க்க வேண்டும் என்பதே. ஆனால் இது அவசிய மற்றதாகி விட்டது. காரணம் தலைக்கே ஆபத்து வருகையில் தலைப் பாகையைப் பத்திரப்படுத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை அதைப் போல் நம்முடைய அடிப்படையான நாட்டுக்கே கேடு வருகையில் இப்போது தேவிகுளம் - பீர்மேடு என்று கதறுவதில் பலன் இல்லை. முதலில் நாட்டைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டு நாட்டைக் காப்பாற்றி அதன் பிறகு வேண்டுமானால், தேவிகுளம் - பீர்மேடு பற்றிய கவலை கொள்ளலாம்.

### தமிழ்நாடு என்றில்லாதபடி சுதந்தரமே பறிபோகிறது

இன்றையதினம் நாட்டையே பறிகொடுக்கும் நிலைமையில் தட்சிணப் பிரதேசம் என்று அமைக்க திட்டமிட்டிருக்கிறார்கள். தட்சிணப்பிரதேசம் அப்படி அமைக்கப்படுமானால் நாம் தமிழ்நாடு என்று கூறிக் கொள்ளவும் முடியாது. தமிழ் நாடு என்ற பெயரையே மறைத்துவிடுவார்கள், இன்றைக்குள்ள சென்னை நாடுஎன்பது மாற்றப்பட்டு தமிழ்நாடு என்று பெயரிடும்படி கேட்கிறோம். அப்படி இருக்க தட்சிண பிரதேசம் என்ற பெயரைக் கொடுத்தார் களானால் நம் நாட்டின் பெயர் அடியோடு மறைந்து போகும். ஆகவே தட்சிணப் பிரதேச அமைப்பு முயற்சியை முறியடிக்க முதலில் முயற்சி செய்ய வேண்டிய அவசியம் உள்ளவர்களாக இருக்கிறோம்.

### பீர்மேடு பிரச்னைக்கு உயிரில்லை

எப்பொழுது தட்சிணப் பிரதேசம் அமைக்கப்படும் என்ற செய்தி வெளியானதோ, அன்றைய தினமே பீர்மேடு - தேவிகுளம் பற்றிய பிரச்னை செத்துப்போய்விட்டது என்பது பொருள். தட்சிணப் பிரதேசம் உயிர் பெற்று எழுந்திருக்க ஆரம்பித்தவுடன் பீர்மேடு இந்நாடுடன் இருந்தால் என்ன அல்லது மலையாளத் துடன் இருந்தால் என்ன? மலையாள நாடு. கன்னட நாடு, தமிழ் நாடு மூன்றையும் சேர்த்து தட்சிணப்பிர தேசம் என்று கூறுகையில் எல்லாம் ஒன்றைப்போல் பாவித்து தான் எதையும் செய்வார்கள்.

### விளம்பரத்துக்கான போராட்டம் தேவையில்லை

ஆகவே பீர்மேடு - தேவிகுளம் போன்ற பகுதிகளுக்கு தற்சமயம் கிளர்ச்சி அவசியம் இல்லை. தட்சிணப்பிரதேச அமைப்பு செத்துப்போகுமானால், அதன் பிறகுதான் பீர்மேடு -தேவிகுளம் பற்றிய கிளர்ச்சிக்கு உயிர் உண்டாகும் அவசியம் இருக்கிறது. ஆனால் ஒருசில சுயநலக்காரர்கள் விளம்பரத்திற் கென்றும், வீண்வேலைக்கென்றும் கிளர்ச்சி கிளர்ச்சி என்று மக்களைத் தூண்டிவிட்டு, தகாத காரியங்களில் ஈடுபடச் செய்கிறார்கள். மக்கள் ஒன்றும் அறியாதவர்களாய் கிளர்ச்சி என்றவுடன் சிந்தித்துப் பார்க்காமல் கண் முடிக்கொண்டு எதையும் செய்கிறார்கள்.

### வரவிருக்கும் பேராபத்து

தட்சிணப் பிரதேச அமைப்பு மட்டும் வருமானால். இங்கு இப்போது பார்ப்பான் மட்டும் இருந்துகொண்டு நம் உயிரைக் குடித்துக் கொண்டிருப்பது போதாது என்று மலையாளிக் கூட்டமும் இங்கேவந்து நிரம்பிவிடும், இவை இரண்டும் சேர்ந்து நம்மை அழுத்திக் கொண்டிருக்கும். நம்மை முன்னேற விடாது. ஒன்றுக்கும் தலையெடுக்காதபடி நம்மை என்றைக்கும் கூலி களாகவே வைத்திருப்பார்கள்.

ஏறக்குறைய பார்ப்பனக்குறும்பும் மலையாளக் குறும்பும் ஒன்றுதான், இரண்டிற்கும் ஒற்றுமை அதிக பார்ப்பானுக்குள்ள புத்தியெல்லாம் மலையாளிக்கு உண்டு. பார்ப்பானைப்போலவே மலையாளிகள் மான ஈனமில்லாதவர்கள். மற்ற நாட்டில் போய்

அண்டிப்பிழைக்கிறோமே என்ற எண்ணம் கூட இருக் காது. எதற்கெடுத்தாலும் திமிராகப் பேசவும் பார்ப்பானைப் போல் தந்திரமாகப் பேசவும்தான் தெரியும்.

**மலையாளிகள் தூண்டுதல்**

தட்சிணப் பிரதேச அமைப்பு முயற்சியே மலையாளிகளின் தூண்டுதலால் தான் உண்டானது. முன்பு சிறிது நாட்களுக்கு முன் இதைப்போன்றே திடீரென்று தட்சிணப்பிரதேசம் அமைக்கப் போவதாகக் கூறினார்கள். அதற்கு என்னுடைய சம்மதமும் கிடைத்துவிட்டதாக வெளியிட்டார்கள். உடனே நான் என்னைக் கேட்காமல் இவ்வளவு துணிச்சலாக பத்திரிகையில் வெளியிடும் அளவுக்கு வந்துவிட்டதே என்று உடனே மத்திய அரசாங்கத் திற்குத் தந்திகொடுத்து நான் தட்சிணபிரதேச அமைப்பை வன்மை யாகக் கண்டிக்கிறேன் என்று தெரிவித்தேன். மேலும் பத்திரிக்கை வாயிலாகவும் அதற்கான மறுப்புகளையும் எழுதிவந்தேன், அதன் பிறகு அந்தப்புகை அப்படியே இருந்து அடங்கிப் போய்விட்டது. இப்போது மறுபடியும் முளைப்பதற்கு ஆரம்பித்திருக்கிறது. இதுவும் மலையாளிகளின் தூண்டுதல்தான்.

மலையாளிகளுக்கு வடக்கே கொஞ்சம் செல்வாக்கு உண்டு. நேரு கூட மலையாளிகளின் யோசனையைக் கேட்டபிறகு தான் எதையும் வெளியிடுவார். எனவே மலையாளிகள் நேருவிடம் சொக்குப் பொடி தூவி மயக்கி, அவருடைய முயற்சியால் இந்த அமைப்புமுறை வருவதாகத் தந்திரம் செய்கிறார்கள். நேருவும் மலையாளிகளுக்கு ஏற்றபடி கூத்தாடுபவர் இன்றைக்கு மலை யாளிகளின் பாக்கெட்டிலேயே நேரு மாட்டிக்கொண்டிருக்கிறார்.

தன்னிடம் உள்ள நேருவை மலையாளிகளும் சும்மாவைத் திருப்பதில்லை, ஏதாவது ஒன்றைக்கூறி தூண்டிவிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். அதில் ஒன்றுதான் தட்சிணபிரதேசம் என்பது. காரணம் மலையாளநாடு மிகவும் சிறிய நாடு, பிள்ளைக் குட்டிகள் அதிகம் பெறுகிறார்களே தவிர, அவற்றை அங்கே வைத்துக் காப்பாற்ற போதிய வசதி இல்லை. நாட்டின் பரப்பளவுக்கு ஏற்ற முறையில் இல்லாமல் அங்கு ஜனத் தொகை அதிகம். இப்போதுள்ள மலையாள நாட்டைப் போல் இரண்டு மூன்று பங்கு பரப்பளவு இருந்தாலும் அங்குள்ள மக்கள் பிழைக்கப் போதிய வசதி இருக்காது. ஆகவே அந்நாட்டில் அடங்கியது போக எஞ்சியவர்கள் வெளியே சென்று பிழைக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள் மிகவும் பரிதாபத்துக்குரியதென்றாலும், அதுகள் நம்முடைய உயிரையா வாங்க



வேண்டும்? ...... .. ,இப்போது கழுத்தைக் கடித்து ரத்தத்தை உறிஞ்சும் குள்ளநரிக் கூட்டம் இருந்து கொண்டு இருக்கிறது. அத்துடன் மற்றொரு வேங்கைக் கூட்டமும் இங்கு வந்து சேர்ந்தால் நம்முடைய அறிவுக்கு அவை இரண்டுமே முடிவு செய்துவிடும் இருந்தாலும் தங்கள் மலையாள நாட்டில் பிழைக்க வழியில்லை என்பதற்காக நம் தமிழ்நாட்டில் வந்து பிழைக்க வேண்டுமா? இங்குள்ள தமிழனே மலேயா, சிலோன் சென்று வாழ்கிறான். அங்கு சென்றவர்கள் எல்லாம் அங்கங்கே துரத்தப்படுகிறார்கள். அவர்கள் இங்கு தாய்நாட்டிற்குத் திரும்பி வந்தவுடன் அவர்களுக்கு என்ன வழி செய்வது என்பதே தெரியவில்லை அப்படி இருக்க எங்கோ கிடக்கும் மலையாளக் கூட்டம் இந்நாட்டில் புக எத்தனிக்கிறது. தமிழர்களுக்கு மிகவும் வேதனையாகத் தான் இருக்கிறது.

**பார்ப்பான் – மலையாளி உறவு**

பார்ப்பானுக்கு இதைப்பற்றியே கவலையே கிடையாது; ஏனெனில் மலையாள ஜாதி இன உணர்ச்சியற்ற ஜாதி, பார்ப்பான் சொல்படி பாட்டுப்பாடும் ஜாதி, அதற்கு பார்ப்பான் - தமிழன் என்ற பாகுபாடு தெரியாது ஏறக்குறைய பார்ப்பன நாகரீகத்திற்கும் மலையாள நாகரீகத்திற்கும் ஒற்றுமையுண்டு. இப்போது கூடப் பார்க்கிறோம். பார்ப்பான் ஒரு உத்யோகத்தில் இருந்தால் அவனால் எத்தனை தமிழனை முன்னுக்கு வர முடியாமல் செய்ய முடியுமோ அதைப் போன்றே மலையாளியும் செய்கிறான். ஆனால் பார்ப்பனர்களுக்கும் மலையாளிகளுக்கும் ஒருவருக் கொருவர் உதவி செய்துக்கொள்வார்கள். தமிழன் என்றால் மலையாளி கவலை கொள்வதே கிடையாது. மேலும் தன்னால் முடிந்தவரை மலையாளியை முன்னுக்குக் கொண்டு வருவ திலேயே இருப்பான். இப்படி இந்த இரண்டு ஜாதியும் அதனதன் காரியத்திலேயே கண்ணும் கருத்துமாய் இருந்து இந்நாட்டைப் பாழாக்கி நம்மக்களைக் கொடுமை செய்கின்றன.

**உத்யோகத்திலும் கொள்ளை**

எப்படியோ மலையாளிகளின் எண்ணிக்கை இந்நாட்டில் பெருகிவிட்டது. பார்ப்பான் எத்தனை பேர் உத்யோகத்தில் இருக்கின்றானோ அதைப்போன்றே மலையாளிகளும் இருக் கின்றனர். நாம் பார்ப்பனர் அல்லாதவர்களுக்கும் உத்யோகம் கொடுக்க வேண்டுமென்று கேட்டால் யாராவது மலையாளிக்குக் கொடுத்துவிட்டு பார்ப்பனன் அல்லாதவனுக்கு உத்யோகம்

கொடுத்திருக்கிறேன் என்று தந்திரமாகக் கூறிவிடுகின்றனர். இப்படி எந்த உத்தியோகத்தை எடுத்துக் கொண்டாலும் பார்ப்பனர்கள் அல்லது மலையாளிகளே ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மலையாளநாட்டில் ஆண்களுக்குச் சொத்துரிமை கிடையாது பெண்களுக்குத்தான் சொத்துரிமை உண்டு. மலை யாளிகள் தங்கள் குழந்தைகளுக்கு எப்படியாவது கல்வி புகட்டி விடுகிறார்கள். இங்கு பார்ப்பனர்கள் படித்திருப்பதைப் போன்று மலையாளிகள் எல்லாம் படித்திருக்கிறார்கள் படித்தபின் வேலை தேடுவதற்கு ஆரம்பித்தவுடன் அந் நாட்டில் எத்தனை பேருக்குத் தான் வேலை கிடைக்கும்? அங்கு ஒரு சிலருக்கு மட்டும் தான் வேலை கிடைக்கிறது மற்றவர்கள் வேளிநாட்டிற்குச் சென்று வேலை தேடுகிறார்கள். எங்கே வேலை கிடைக்கிறதோ அங்கேயே நிரந்தரமாக வசிக்க ஆரம்பிக்கிறார்கள். அப்படி வேலை தேடிக் கொண்ட கூட்டம்தான் இன்றைக்கு நம்நாட்டில் எங்கிலும் அவர்களாகவே இருக்கிறார்கள். அங்கே பிழைக்க வறியின்றி போய் இந்நாட்டில் வந்துப் புகுந்து நமக்குத் தொல்லை கொடுக் கிறார்கள். வேலை கிடைக்கவில்லை நாட்டில் வசிக்க இடமில்லை என்றால், அந்தமானுக்குப் போவதை விட்டு இங்கே வந்து நம் உயிரை வாங்குகிறார்கள்.

**சுயமரியாதையோ, சுதந்தரபுத்தியோ இல்லாதவர்கள்**

அவர்களுக்கு சூத்திரர்களாக இருப்பதால் மானம் என்பது சிறிதும் கிடையாது. சூத்திரர்களாக இருப்பதால் அதை இறி தன்மையாகக் கருதுவதில்லை. பார்ப்பனனுடைய வைதிக மூடப்பழக்க வழக்கங்கள் அத்தனையும் அப்படியே ஒப்புக் கொள்ளுகிறவர்கள் அப்படிப்பட்டவர்களை நம்முடன் கொண்டு வந்து சேர்க்க முற்படுவது நம்மை இன்னும் கீழானவர்களாக இருக்கச் செய்யவே ஆகும்.

மேலும் வடநாட்டினருக்கு என்றைக்கும் அடிமைகளாக இருக்க வேண்டிய அவசியம் கொண்டவர்கள். ஏன் என்றால் தனித்து வாழுவதென்றால் அவர்களால் முடியாத காரியம். இப்போதே அங்கு பிழைக்க இடமில்லை என்றுதானே வெளியே ஓடுகிறார்கள். தனித்து வாழுவதற்கு முற்பட்டால் தன் நாட்டு எல்லையை விட்டு வெளியே போக முடியாது. எனவே இப்படி கும்பலுடன் வாழ்ந்தால்தான் -அதுவும் வடநாட்டின் அடிமையில் இருந்தால்தான் கண்ட இடமெல்லாம் ஓடிப்பிழைக்க முடியும். இன்றைக்கு வடநாட்டான் கூறுகிறபடி கேட்டால்தான்,



நாளைக்கு வடநாட்டானிடமிருந்து சலுகை கிடைக்கும். இப்போது அவர்களுக்கு சலுகை கொடுப்பதற்குத்தான் தட்சிணப் பிரதேசம் அமைக்கிறார்கள் என்பதிலிருந்து நன்கு புரிந்து கொள்ளலாம்.

இவ்விதம் அக்கிரமக்காரர்களால் ஆளப்படும் ஜனநாயக ஆட்சி மிகக் கொடுரமான முறையில் ஒன்றை விட்டு ஒன்றாக நமக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டே இருக்கிறது. என்றைக்கு இந்த ஜனநாயக ஆட்சி அழிக்கப்படுகிறதோ, அன்றையதினம் தான் நம்நாடு நிம்மதியான வாழ்க்கை வாழ முடியும். அக்கிரமச் செயல்களை எல்லாம் துணிந்து செய்கின்றனர். செய்வது தப்பு என்று தெரிந்து கொண்டும் வீண் விவாதத்திற்காகிலும் நம் மக்களுக்குத் தொல்லை கொடுக்க முற்படுகிறார்கள்.

**காட்டிக்கொடுக்கும் பார்ப்பனர் கூட்டம்**

இதற்குத் தகுந்தபடி இந்நாட்டு பார்ப்பனர்களும் காட்டிக் கொடுக்கிறார்கள். காட்டிக்கொடுக்கும் புத்தியும், வடநாட்டுடன் சேர்ந்து கூத்தாடும் புத்தியும் கொண்ட பார்ப்பனர்கள் என்றென்றும் நமக்குத் தொல்லைகளையே விளைவித்துவந்து இன்றைய நிலையிலும் பெரும் தொல்லை கொடுக்கிறார்கள் அதற்குத் தகுந்தபடி பார்ப்பனப் பத்திரிகைகள் கொட்டை எழுத்துக்களில் எழுதுகின்றன. எவனாவது ஒரு அன்னக்காவடி தட்சிணப்பிரதேசம் வேண்டும் என்று சொல்லி இருப்பானாகில் உடனே அவர் ஆதரித்தார் இவர் ஆதரித்தார் என்று எழுது கின்றன. பெரும் அளவில் மக்கள் எதிர்த்தால் அதை உடனே மூடிவிடுகிறார்கள் எதிர்த்த விஷயம் வெளியில் வராதபடி மறைத்து விடுகிறார்கள்.

பார்ப்பனர்களின் பேச்சைக் கேட்டுக்கொண்டு மற்றவர் களும் தலைகால் தெரியாமல் கூத்தாடுகிறார்கள் ஏதோ பார்ப்பனருக்கு நல்ல பிள்ளையாக வேண்டுமே என்பதற்காக எதையும் கண்முடித்தனமாகக் பின் பற்றுவது என்பது ஒரு சிலருக்கு வழக்கமாய்ப் போய்விட்டது. அப்படி இருந்தால்தானே நாளைக்கு அக்ரகாரத்தில் பொறுக்குவதற்கு வசதியாயிருக்கும்? அந்தக் காரியத்தை உத்தேசித்து எதையும் முட்டாள் தனமாகச் செய்வது என்பதும் அதைப் பொதுநலம் என்று கூறிக்கொள்வது அதை விட மிக மோசமானதென்றும் நான் கூறவேண்டும்.

தட்சிணப்பிரதேசம் அமைக்கப்படுமானால் அதனால் விளையும் நன்மை, தீமைகள் என்ன என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும் பாமரமக்கள் சிந்திக்கவில்லை என்பது அதிசயம் இல்லை இதுவரை பார்ப்பான் பேச்சைக் கேட்டுக்கொண்டு ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக மடைமையிலேயே இருந்தவர்கள் இன்னும் போதிய அறிவு பெற்று பக்குவமாக்கப் படவில்லை.

### படித்த தலைவர்களோ – அந்தோ பரிதாபம்!

ஆனால் பொது நலத்திற்கென்றும் நாட்டின் நன்மைக் கென்றும் பாடுபடுகிறேன் என்று கூறிக்கொண்டிருப்பவர்கள் இதைப்பற்றி சிந்திக்கவில்லையே என்பது அவர்களின் முட்டாள் தனத்தைக் காட்டுவதும் அன்றி அவர்களின் ஏமாளித்தனத்தைக் கண்டு பரிதாபப்படும் அளவில் இருக்கிறது இப்படிப்பட்ட பொதுநலத் தொண்டர்கள் தலைவர்கள் என்பவர்கள்கூடப் பார்ப்பனர்களின் பேச்சில் மயங்கிவிடுகிறார்கள் என்பதைக் குறித்து மிகமிகப் பரிதாபம் அடைகிறேன்.

ஆனால் என்னைப் பொறுத்தமட்டிலும் யார் சொன்ன போதிலும் என்னுடைய மனதுக்குப் பிடித்தமானதையே செய்ய முற்படுவேன் மற்றவர்களின் தாட்சண்யத்திற்கு எதையும் பின்வாங்குகிறவன் இல்லை. கொடிஎரிப்புப்போராட்டம் துவக்கியது காமராசர் ஆட்சியில்தான் கொடி எரிப்பு மட்டும் நடந்திருக்குமானால் காமராசர் சும்மா இருந்திருக்கமாட்டார் அப்போதும் எங்களுக்கு அவர் சட்டப்படி ஏதும் தண்டனை கொடுத்தே இருப்பார் அப்படி இருக்க நான் அவருடைய தயவுக்காகவோ அவருடைய யோசனையின் மீதோ எதையும் பின்பற்றும் அவசியம் இல்லை.

### திடுக்கிடும்படியான போராட்டம் துவங்குவேன்

**இப்போது தட்சிணப் பிரதேசம் அமைக்கப்படுமானால் நான் காமராசர் ஆட்சி என்பதற்காக சும்மா இருக்கமாட்டேன் கொடி எரிப்புப் போராட்டத்தைவிட இன்னமும் திடுக்கிடும் படியான போராட்டத்தைச் செய்யத்தான் திட்டமிட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். கொடி எரிப்புப்போராட்டம் மிகச் சிறிய விசயம் அதனால் பொருள் கஷ்டமோ உயிர்நஷ்டமோ அல்லது பொதுமக்களுக்குத் தொல்லையோ கொடுப்பது கிடையாது. மிகவும் சிக்கனச் செலவில் நடைபெறும் காரியம். ஆனால் காரியமோ மிகப்பெரிதுதான்.**



அது வடநாட்டு ஆட்சியையே ஒரு கலக்கு கலக்கிவிட்டதே! பெரிய ஆட்கள் எல்லாம் முன்பு தார் கொண்டு இந்தியை அறித்ததற்கு அலட்சியமாக பதில் சொன்னதுபோல் இதற்கும் அப்படி அலட்சியமாகச் சொல்லவில்லை எல்லோரும் என்ன ஆகுமோ என்று திகில் அடைந்து கொண்டுதானிருந்தார்கள். ஆனால் எப்படியோ சமாதானத்தின் பேரில் அப்போராட்டம் ஒத்திவைக்கப்பட்டு கைவசம் இருக்கிறது. ஆனாலும் தட்சிணப் பிரதேசம் அமைக்கப்படுமானால் அந்தப் போராட்டத்தை விட மேலான போராட்டமும் கைவசம் இருக்கிறது. அதை உபயோகப்படுத்தத்தான் போகிறேன்.

### இப்போதே தயாராகுங்கள்!

இதற்குத் தோழர்கள் எல்லோரும் இப்போதே தயார் செய்து கொண்டிருக்க வேண்டும். என்னுடைய போராட்டத் திட்டம் வெளியாகும் நேரத்தைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். அப்படி **நாட்டின் விடுதலைக்கும் நாட்டினைக் காப்பதற்கும் நாட்டினைப் பறிகொடுக்காமல் மீட்பதற்கும் சிலர் செத்துப் போனால் கூட பாதகம் இல்லை. இப்படிப்பட்ட நல்ல காரியத்துக்கு உபயோகப்படாத உயிர் வேறு எதற்கும் வேண்டிய தேவை இல்லை.** ஆகவே இன்றைக்கு நம்முடைய முயற்சியெல்லா வற்றையும் தட்சிணப் பிரதேசம் அமைக்கப் படாத முறையில் பார்த்துக் கொள்வதற்குப் பயன்படுத்த வேண்டும்.

என்று கூறி மேலும் பேசினார்கள்.

## எல்லைப் போராட்டம்: பெரியாரும் – ம.பொ.சி யும்

### தோழர் ம.பொ.சி முயற்சி

நண்பர் ம.பொ.சி தேவிகுளம் - பீர்மேடு சம்பந்தமான கிளர்ச்சிக்குத் திட்டமிடுவதற்கு என்னை அழைத்திருந்தார். 13. 01.56 ம் தேதி எனக்கு அவர் எழுதிய கடிதத்தில் தங்களை எல்லைக் கிளர்ச்சி சம்பந்தமாகச் சந்தித்துப் பேசவிரும்புகிறேன் தாங்கள் விரைவில் சென்னை வருவீர்கள் என்று நம்புகிறேன் என்பதாக எழுதி இருந்தார். பின்பு 16ந் தேதி எனக்குத் தந்தி கொடுத்து சென்னைக்கு வரும்படி கேட்டிருந்தார் அவர் கொடுத்த தந்தியில்,

"Discussion about Border dispute. Like to meet in person Madras. Letter sent to Trichy"

என்பதாக இருந்தது நான் அதற்கு உடனே 19ம் தேதி அன்றைய தினம் சென்னைக்கு வருகிறேன் என்பதாகத் தெரிவித்துவிட்டேன். அதற்கு அவர் 17.1.56 தேதி,

"Expect at Madras on 19th"

என்று தந்தி கொடுத் திருந்தார். நண்பர் குருசாமியும் என்னுடைய கடிதத்தைப் பார்த்த பின் நண்பர் ம.பொ.சியைக் கலந்து பேசி அவரும் எனக்கு தந்தி கொடுத்தார். அதில்

"received letter consulted both; your presence nineteenth Thursday essential"

என்பதாகக் கொடுத்திருந்தார் பிறகு 19ந்தேதி அங்கு சென்று நண்பர் ம.பொ.சி யை ஒரு நண்பர் வீட்டுக்கு வரும்படி செய்து அங்கு இருவரும் சந்தித்துப் பேசினோம். அவர் கேட்டபடி **எல்லைப் போராட்டம் சம்பந்தமாக நான் ஒப்புக் கொண்டேன் என்றாலும், என்னுடைய விருப்பத்தையும் அவர் ஒப்புக் கொண்டபிறகு தான் அதில் ஒரு சரியான முடிவுக்கு வந்தோம்.**

அவர் எப்படியாவது எல்லைப் போராட்டத்திற்கு மட்டும் என்னைச் சம்மதித்து போராட்டத்திற்கு ஆதரவு பெற்றுக் கொண்டால் போதும் என்று ஏதேதோ தந்திரமாகப் பேசினார். ஆனால் நான் விட்டுக் கொடுக்கவில்லை. இன்றைக்கு தமிழ் மக்களுக்கு எல்லைப்போராட்டம் மட்டும் முக்கியமில்லை. மொத்தம் நான்கைந்து குறைபாடுகளில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே அத்தனைக்கும் கிளர்ச்சித் தொடங்குவதாக இருக்கவேண்டும். மேலும் நாம் எல்லைப் போராட்டத்திற்கு மட்டும் கிளர்ச்சி தொடங்கினால், நாம் இதுவரை எவையெவைகளை முக்கியம் என்று கருதி வந்தோமோ, அவைகளை எல்லாம் அலட்சியம் செய்துவிட்டு, இதைமட்டும் பெரிதாக நினைத்து கிளர்ச்சி செய்வதாக அரசாங்கத்தார் நினைத்துக் கொள்ளுவார்கள், எனவே எவைகள் முக்கியம் என்று தோன்றுகிறதோ அவைகள் அத்தனைக்கும் கிளர்ச்சி தேவையாகும் என்று கூறினேன். அவரும் இறுதியில் ஒப்புக்கொண்டார்.



**முக்கியநிபந்தனைகள்**

**✦ அதன்படி எல்லைக்கமிஷன் என்பது எல்லையை வரையறுப்பதில் தமிழ் மக்களுக்குச் செய்துள்ள ஓர வஞ்சனையான காரியங்களைத் திருத்துதல் முதலாவதாகும்.**

**✦ இரண்டாவதாக இந்தி மொழியை யூனியனுக்கு ஆட்சி மொழியாகவும் இந்திய தேசீய மொழியாகவும் ஆக்கப்படுவதற்கு பலவழிகளிலும் அரசாங்கம் முயற்சிப் பதைத் தடுப்பது,**

**✦ மூன்றாவதாக யூனியன் ஆட்சி என்பதில் படை போக்குவரத்து, வெளிநாடு உறவு இவை தவிர்த்த மற்ற ஆட்சியின் உரிமைகள் அனைத்தும் தமிழ்நாட்டுக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.**

இப்படிக் கூறுவதன் மூலம் திராவிடர் கழகத்தின் லட்சிய மான தமிழ்நாடு யூனியனிலிருந்து விடுபட்டு பூர்ண சுயேச்சை உரிமையுடன் தனித்து இயங்க வேண்டும் என்பதாக முடிவு செய்து கொண்டிருந்தாலும் அந்தக் கொள்கைக்குப் பாதகம் இல்லாமலும் மேற்கண்ட விஷயங்கள் பற்றிய கிளர்ச்சியை முன்னிட்டு மற்ற ஸ்தாபனக்காரர்களுடைய ஒத்துழைப்பையும் நட்பையும் முன்னிட்டு இந்த மூன்றாவது வாசகத்திற்கு இணங்குகிறது.

**✦ மற்றும் நான்காவதாக, தமிழ் நாட்டுக்குத் தமிழில் சென்னை என்றும், ஆங்கிலத்தில் மெட்ராஸ் என்றும் பெயரிட் டிருப்பதை மாற்றி தமிழ்நாடு என்ற பெயரையே இருக்கும்படி செய்ய வேண்டும் என்பது.**

**✦ அய்ந்தாவதாக தமிழ்நாட்டை தென்மண்டலம் என்ற அமைப்பு முறையின்படி மற்ற நாடுகளுடன் இணைக்கத் திட்டமிட்டிருப்பதை எதிர்ப்பது.**

இந்த அய்ந்துக்கும் கிளர்ச்சி நடத்த வேண்டியது அவசியம் அதற்காகவே நம்முடைய முழுமுயற்சியையும் பயன்படுத்த வேண்டும் என்று சொன்னேன். அதற்கு அவர் ஒப்புக்கொண்டு கிளர்ச்சிக்கு யார்யாரை சேர்த்துக் கொள்வது என்று கேட்டார்.

நான் அதற்கு திராவிட பார்லிமெண்டரிக் கட்சித் தலைவர் நண்பர் சுயம்பிரகாசம் ஜஸ்டிஸ் கட்சி என்ற பெயரால் உள்ள கட்சிக்குத் தலைவராய் இருந்துவரும் சர்,பி.டி. ராஜன் மற்றும் கம்யூனிஸ்டு, சோஷலிஸ்ட் தோழர்கள் இவர்களைக் கேட்டு

அவர்களைச் சேர்த்துக் கொள்ளலாம் என்றேன். அவர் அதற்கு "கண்ணீர்த்துளி"களைச் சேர்க்கலாமா என்றார். நான் இப்போது அவர்கள் தேவையற்றவர்கள் அவர்களால் ஆகக்கூடியது ஒன்றும் கிடையாது சும்மா கூட்டத்திற்காகிலும் ஆள் சேர்ப்பது சரியில்லை கொஞ்சமாக இருந்தாலும் பொறுக்கி எடுத்த திறமை சாலிகளாக இருந்தால் போதும் உபயோகமற்றதுகளை எல்லாம் சேர்த்துக்கொண்டால் வீண் கயவாளித்தனத்துக்கு இடமாகி விடும்" என்று சொல்லிவிட்டேன்.

பிறகு நான் வீட்டிற்கு வந்தவுடன் டெலிஃபோனில் நண்பர் ம.பொசி என்னைக் கூப்பிட்டார் என்ன விசயம் என்று கேட்டேன் அதற்குள் வீட்டிற்குப் போனவுடன் என்ன நினைத்துக் கொண்டாரோ தெரியவில்லை "நான் கம்யூனிஸ்டுக்காரர்களைக் கேட்டேன் அவர்கள் மேலிடத்தை விசாரித்து சம்மதம் பெற்ற பின்பு தான் கலந்து கொள்வோம் என்றனர் சோஷியலிஸ்டுகள் சரி என்றார்கள். ஆனாலும் இவர்களும் மற்றத் தோழர்கள் சிலரும் எல்லைப்பிரச்னைக்கு மட்டும் தான் கிளர்ச்சி செய்ய வேண்டும் என்கிறார்கள் நீங்கள் தெரிவித்த மற்ற நான்கு கிளர்ச்சிக்கும் சம்மதிக்க மறுக்கிறார்கள் எனவே அவைகளைப் பற்றி யோசித்துத் தான் சொல்ல வேண்டும், உங்கள் அபிப்ராயம் என்ன?" என்று கேட்டார்.

நான் அதற்கு "நானும் யோசித்துத்தான் சொல்ல வேண்டும்" என்று கூறிவிட்டு அன்று இரவே சென்னையை விட்டுப் புறப்பட்டுவிட்டேன் பிறகு 21ம்தேதி அன்றையதினம் அவருடைய தந்தி எனக்குக் கிடைத்தது. அதில்

"consulted Gurussamy; wire your consent as per my letter"

என்பதாக இருந்தது இதைக் கண்டவுடன் நான் ஒன்றும் செய்வதற்கு முடியவில்லை காரணம் "as per my letter" என்பதாகத் தந்தியில் கண்டிருக்கிறது, ஆனால் அவருடைய தபால் எனக்குக் கிடைக்கவில்லை கிடைத்திருந்தால்தான் நான் என்ன விஷயம் என்பதைப் புரிந்து கொண்டு மறுபதில் கொடுக்க முடியும் ஆனால் அவர் 20ந்தேதி தான் கடிதம் எழுதியிருக்கிறார். அக்கடிதம் நியாயப்படி 21ந்தேதி தான் எனக்கு கிடைத்திருக்க வேண்டும் ஆனால் 22ம் தேதி தான் கிடைத்தது இந்த ஒழுங்கில் அந்தக்கடிதத்திற்கு இரண்டனா ஸ்டாம்பு அதிகம் ஒட்டி 'எக்ஸ்பிரஸ்' தபாலில் அனுப்பி யிருக்கிறார்.



**தபால் தாமதங்கள்**

தபால் துறையின் லட்சணம் அப்படியிருக்கிறது. இப்படி ஒரு நாள் தாமதித்ததுகூடப் பெரிதல்ல. என்னுடைய தபால்களை எத்தனையோ - அதுவும் ' எக்ஸ்பிரஸ்' தபாலில் அனுப்பப் பட்டவைகளை தபால் பெட்டிகள் விழுங்கிவிட்டனவோ தெரிய வில்லை. அப்படி அதிக தபால்கள் இன்னமும் எனக்கு அனுப்புவது வந்து சேருவதும் இல்லை.

அப்படிப்பட்ட நிலையில் நண்பர் ம.பொ.சி 20ம் தேதி அனுப்பிய எக்ஸ்பிரஸ் கடிதம் எனக்கு 22ம் தேதி வந்து சேர்ந்தது. அவர் 20ம் தேதி எழுதினார் என்பதற்கும் எனக்கு 22ம் தேதி தபால் கிடைத்தது என்பதற்கும் தபால் உரையிலேயே தபால் ஆஃபீஸின் முத்திரை இருக்கிறது.

எனவே நான் 21ந்தேதி தந்தியைக் கண்டவுடன் ஒன்றும் புரியாமல் திகைத்து 'ட்ரங்கால்' மூலமாக நண்பர் குருசாமியுடன் பேசுவதற்கு சென்றேன். ஆனால் கூப்பிட்டு விசாரித்தவுடன் அன்றைய தினம் அவர் திருவத்திபுரம் போய்விட்டார் என்பதாக கூறிவிட்டார்கள், பிறகு நான் நண்பர் ம,பொ,சிக்குத் தந்தி மூலமாக "wire received letter not received" என்பதாக தந்தி கொடுத்துவிட்டேன். தந்தி கொடுத்த சிறிது நேரத்திற்கெல்லாம் நண்பர் ம.பொ.சி ட்ரங்க்கால் மூலமாகக் கூப்பிட்டார்.

நான் "உங்கள் தந்தி வந்தது, கடிதம் வரவில்லை அதைக் குறித்து உங்களுக்கு இப்போது தான் தந்தியும் கொடுத்து விட்டேன். உங்கள் கடிதம் கிடைக்காததால் நான் விஷயம் என்ன என்பதை புரிந்து கொள்ள முடியவில்லை" என்று கூறி மேலும் நான் அவரிடம் நேரில் பேசிய மேற்குறிப்பிட்ட அய்ந்து பிரச்னைகளை பற்றியும் கிளர்ச்சி செய்ய வேண்டும் என்று கூறினேன். அவர் அதற்கு "நான் கடிதத்தில் எழுதியுள்ளது என்னவென்றால்,

**1.தமிழக எல்லைப்பகுதி, 2.தமிழகம் என்று பெயரிடுவது 3. இந்தி திணிப்பை எதிர்ப்பது ஆக இந்த மூன்றுக்கு மட்டும் போராட்டம் துவங்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது அதற்கான அழைப்பு நகலையும் அனுப்பி இருக்கிறேன். அதைப் பார்த்துக் கையெழுத்திட்டு அனுப்பினால் அதன்படி அச்சடித்து எல்லோருக்கும் அனுப்பி விடுகிறேன்" என்று கூறினார்.**

**நான் "அய்ந்து போராட்டங்களுக்குச் சொன்னேன் மூன்றை மட்டும் குறிப்பிட்டால் போதாது" என்றும் கூறினேன். பிறகு "இதனை விவரிக்க இன்று தங்களுக்கு தபால் எழுதுகிறேன். நாளைக்கு என்ற தபாலைப் பார்த்துவிட்டு விபரம் தெரிவியுங்கள்" என்று கூறிவிட்டு வந்துவிட்டேன்.**

*அன்றைக்கே ட்ரங்காலில் பேசியவைகளை உறுதிப்படுத்த கடிதத்தின் மூலம் விபரமாக அய்ந்து பிரச்னைகளையும் எழுதி அவருக்கு ஒரு கடிதமும் அதே கடிதத்தின் நகல் ஒன்றை நண்பர் குருசாமிக்கும் மற்றொரு நகலை 'விடுதலை' அலுவலகத்திற்கும் அனுப்பி அவைகளை நண்பர் ம.பொ.சியிடம் சேர்க்கும்படி எழுதியிருந்தேன். ஏன் மூன்று கடிதங்கள் இப்படி மூன்று பேருக்கும் அனுப்பினேன் என்றால் ஏதாவது ஒன்றாவது போய்ச் சேரும் என்பதற்கே ஆகும் தபால் ஆஃபீஸில் தபால்களை சரியானபடி போய்ச்சேருவதில்லை என்ற பெரிய நியூயஸன்ஸூக் காக இப்படி அனுப்பினேன் ஆனால் மூன்றும் போய்ச் சேர்ந்துவிட்டன.*

**அன்றைய தினம் அதாவது 22ம் தேதிதான் எனக்கு நண்பர் ம.பொ.சியின் கடிதம் கிடைத்தது அதில் அவர் எழுதி இருந்ததாவது "தாங்கள் 19.01.56 இல் என்னிடம் கூறிய மூன்று விஷயங்களையும் சேர்த்து தலைவர்களுக்கு சர்வகட்சிக் கூட்டத்திற்கு அழைப்பு அனுப்ப முடிவு செய்துள்ளேன் அவை 1.தமிழக எல்லைப்பகுதி, 2.தமிழகம் என்று பெயரிடுவது 3. இந்தி திணிப்பை எதிர்ப்பது ஆகும்''.**

*அழைப்பு நகல் ஒன்றை இத்துடன் இணைத்துள்ளேன் அதை தாங்கள் கையொப்பமிட்டு மறு தபாலில் அச்சிட்டு எல்லோருக்கும் அனுப்பி விடுகிறேன் இந்த அழைப்பில் ''கண்ணீர் துளி'' சார்பில் கையெழுத்துப் போடுவது பற்றி தங்கள் கருத்தறிய விருப்பம் கூட்ட இடமும் நேரமும் இன்னமும் நிச்சயிக்கவில்லை தாங்கள் ஏதேனும் யோசனை சொன்னால் நலம் இப்படி எழுதி இருந்தது.*

**இதில் மூன்று விஷயங்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார் நான் அவரிடம் நேரில் கூறியவை அய்ந்து விஷயங்கள். ஆனால் இரண்டு விஷயங்களை விழுங்கிவிட்டு மூன்று விஷயங்கள் என்பதாக மட்டும் குறிப்பிட்டிருந்தார் அவர் அனுப்பி இருந்த அழைப்பு நகலில் பின்கண்டவாறு கண்டிருந்தது.**



*அன்புடையீர்! வணக்கம்.*

*திரு - கொச்சியிலுள்ள தமிழ்ப்பகுதிகள் விஷயத்தில் மத்திய அரசாங்கம் செய்துள்ள நேர்மையற்ற முடிவைத் தாங்கள் அறிவீர்கள் மற்றும் சென்னை ஆந்திர எல்லைப் பிரச்னையில் எல்லைக் கமிஷன் அனுப்பும்படி சென்னை அரசாங்கம் கோரியிருந்ததையும் மத்திய அரசு அலட்சியப் படுத்தியிருக்கிறது தமிழ்ப் பகுதிகள் மட்டுமே கொண்டு அமையவிருக்கும் தனி ராஜ்யத்திற்கு தமிழகம் என்று பெயரிடுமாறு தமிழக மக்கள் கோரிவந்ததும் இதுவரை ஏற்றுக் கொள்ளப்படவில்லை.*

*இவற்றோடு தமிழ்நாட்டு மக்கள் மீது அரசியல் ரீதியாக இந்தியைத் திணிக்கவும் மத்திய அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. ஆகவே மத்திய அரசாங்கம் தமிழ்நாட்டுக்கு இழைத்துள்ள இந்த அநீதிகளை எதிர்த்து கிளர்ச்சி செய்ய தமிழர்கள் எல்லோரும் கட்சிபேதமின்றி ஒத்துழைக்க வேண்டுமென்று இதில் கையொப்பமிட்டுள்ள நாங்கள் கருதுகின்றோம். கிளர்ச்சி நடத்துவதற்கு பொதுவானதொரு வேலைத்திட்டம் அவசிய மாகிறது; ஆகவே இதுபற்றி ஆலோசிக்க எல்லாக்கட்சித் தலைவர் களின் கூட்டம் ஒன்று ஜனவரி 24ம் தேதி அன்று....... மணிக்கு.... இடத்தில் கூட்டி இருக்கிறோம். தாங்கள் தவறாமல் வந்து கூட்டத்தில் கலந்து கொண்டு நடவடிக்கைகளில் ஒத்துழைக்கக் கோருகிறோம்.*

*1. ............., 2. (வின) ம.பொ.சிவஞானம், 3. .................
4. .................. 5. ...................... இப்படி எழுதப்பட்டிருந்தது.*

இதில் கூட்டம் நடைபெறும் இடமும் நேரமும் குறிப் பிடாமல் அந்த இடம் காலியாக இருக்கிறது. காரணம் அதை என்னைப் பூர்த்தி செய்து அனுப்பும்படி எழுதப்பட்டிருந்தது. இதில் 5 பேர்களின் கையெழுத்திற்காக உள்ள இடத்தில் முதலாவது எனக்கு காலியாக விடப்பட்டு, இரண்டாவது இடத்தில் நண்பர் ம.பொ.சி கையெழுத்திட்டிருக்கிறார்.

இன்றைக்கும் முதல்நாள் எனக்குக்கிடைத்த நண்பர் குருசாமியின் கடிதத்திலும் இதைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதாவது இன்று காலை 9 மணிக்கு திரு ம.பொ.சி அவர்கள் தாமாகவே இங்கு வீட்டுக்கு வந்தார். தனிமையிலேயே வந்தார். முடிவு என்ன என்று கேட்டார், "எல்லா பிரச்சனைகளையும் கலந்து போராடினால் தான் பெரியார் அவர்கள் உடன்படு வார்கள்'' என்று விளக்கிக்கூறி, நேற்று டைப் அடிக்கப்பட்ட நம் கிளர்ச்சித் திட்டத்தை அவர் கையில் கொடுத்து, அதைப்படித்து விளக்கிக் கூறினேன். தமக்கு ஆட்சேபணை இல்லை என்றும் மற்றவர்கள் என்ன சொல்வார்களோ என்றும் கூறிவிட்டு, 24ம் தேதியன்று ஆலோசனைக்குழு கூட்டி அதில் விவாதித்து முடிவு செய்யலாம் என்றும், கம்யூனிஸ்ட் கட்சியும், க.து கட்சியும் இக்கூட்டுக்கிளர்ச்சிக்கு வருவதாக நேற்றிரவே ஒப்புக்கொண்ட தாகவும் தெரிவித்தார்.... பிறகு திரு ம.பொ.சி தம் கையெழுத்துடன் பொதுப்படையாக இந்திய சர்க்கார் தமிழருக்கு இழைத்துள்ள தீங்குகளை எதிர்த்துப் போராடுவதற்காக என்று காரணம் காட்டி ஒரு அழைப்பு வேண்டுகோள் எல்லா முக்கிய தலைவர்களுக்கும் விடுப்பதாகவும் அதில் தங்கள் கையெழுத்திடச் செய்யவதற்காக இன்றே திருச்சிக்கு அனுப்புவதாகவும் .............சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்........... இதைக் கண்டவுடன் நான் அவர் க.துக்கள் சார்பில் கையெழுத்திட என் சம்மதத்தை நண்பர் ம.பொ.சி கேட்டது, க.துக்களைக் கலந்து ஆலோசித்து அவர்கள் சம்மதம் பெற்று வைத்துக்கொண்ட பிறகுதான் கேட்டிருக்கிறார்.

நான் 21ம் தேதி எழுதிய கடிதத்தை நண்பர் ம.பொ.சி பார்த்துவிட்டு அதற்கு பதில் எழுதிய கடிதத்தில் எழுதியிருந்ததாவது:-

"19.1.56ல் நாம் சென்னையில் சந்தித்தபோது எல்லைப் போராட்டத்தோடு, இந்தித் திணிப்பு எதிர்ப்பையும் சேர்க்க வேண்டுமென்று வற்புறுத்தினீர்கள். அதிலுள்ள சங்கடங்களை நான் தங்கள் கவனத்துக்குக் கொண்டுவந்தேன்; என்றாலும் தாங்கள் கூறுவதையும் மற்ற தலைவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்ல சம்மதித்தேன், நேற்று பல முக்கியஸ்தர்களை வரவழைத்து ஆலோசனை நடத்தினேன். தங்கள் கடிதமும் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. தமிழக எல்லைப்பகுதிகள் பற்றிய பிரச்னையில் மத்திய அரசாங்கத்தின் முடிவை எதிர்த்து எல்லோரும் ஒன்றுபட்டுக் கிளர்ச்சி செய்ய வேண்டும் என்ற கொள்கை எல்லோராலும் ஏற்கப்பட்டது. அதுபற்றி மேலும் ஆலோசிக்க ஜனவரி 27ந் தேதி தாங்கள் சென்னையில் இருக்கும் தருணத்தில் மற்ற ஸ்தாபனங் களின் பிரதிநிதிகளையும் அழைத்து, எல்லோரும் ஒன்றுகூடி



ஆலோசிக்க முடிவு செய்துள்ளோம். தாங்கள் அவசியம் அன்றைய கூட்டத்தில் கலந்துகொள்வதற்கேற்ப சென்னைக்கு வரக் கோருகிறேன்'' என்பதாக எழுதப்பட்டிருந்தது.

நண்பர் குருசாமி என்னுடைய 21ம் தேதி கடிதத்தைப் பார்த்து விட்டு பதில் எழுதியதில் "தங்கள் கடிதங்கள் (விடுதலை ஆஃபீசுக்கு அனுப்பினதும்) ஆக இரண்டும் கிடைத்தன. கடிதத்தை ஊன்றிப் படித்தேன் திரு. ம.பொ.சி அவர்களை ஃபோன் மூலம் கேட்டேன் தனக்கும் கடிதம் வந்திருப்பதாகக் கூறினார். தம் கட்சிக்காரர் ஒருவர் வீட்டில் 4 - 5 பேர் கம்யூனிஸ்ட் கட்சி, க.து - க்கள் திரு. அந்தோணிப்பிள்ளை ஆகியோருடன் இன்று மாலை 4 மணிக்கு கலந்து பேச வேண்டுமென்று என்னை அழைத்தார். தாங்கள் இல்லாதபடி எந்த ஆலோசனைக்குழுவும் தேவை இல்லை - பயன் படாது என்று கருதி வர இயலாமையைக் கூறிவிட்டேன் பத்திரிக்கையில் தங்கள் கடிதத்தை வெளியிட லாமா என்று கேட்டேன். நேரில் வந்து பதில் தருவதாகக் கூறினார் இந்நேரம் வரையில் வரவில்லை ........

வேண்டுகோள் அறிக்கையில் க. து. கையெழுத்துத் தேவை யில்லை என்று இருமுறை காலையிலும் மாலையிலுங் கூறினேன் ஒப்புக்கொண்டார் அவர்களும் ஒப்புக்கொண்டதாகக் கூறினார் தாங்கள் 24ம் தேதி இங்குவர முடியாதென்று அவருக்கு டெலிஃபோனில் கூறியதாகத் தெரிவித்தார்...... நம்முடைய கருத்து மத்திய சர்க்காரை எதிர்ப்பது என்பது ஆனால் இவர்களுடைய கருத்து திரு. காமராசர் ஆட்சிக்கு தொல்லை கொடுப்பதற்கு நம்மைப் பயன்படுத்த வேண்டும் என்பது.......... இன்று மாலை 6-5 க்கு ஃபோன் செய்தேன் தங்கள் கடிதத்தை வெளியிட வேண்டாம் என்று கூறிவிட்டார் 27ம் தேதி பிற்பகல் 4 மணிக்கு ஆலோசனைக் குழு கூட்டுவதென்றும் தங்களுக்காகவே இத்தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறதென்றும் தங்களை இன்றி எந்த முடிவும் செய்வதற்கு இல்லை என்றும் கூறினார்.......'', இப்படியாக அவருடைய கடிதத்தில் கண்டிருந்தது.

**திரு ம.பொ.சி பல்டி**

இதையேல்லாம் நான் குறிப்பிடுவது இதற்குப்பின்னால் இனிமேல் திரு ம.பொ.சி யார் அடிக்கப் போகிற காரணத்தை விளக்குவதற்கே ஆகும்.

இப்படி எல்லாம் முதலில் கடிதம் மூலமாக நேரிலும் பேசிவந்தவர் சட்டென்று மாற்றமடைந்து விட்டார். பிறகு நான் சென்னைக்குச் சென்றவுடன் 26-ம் தேதி அன்றைய தினம் எனக்கு ஒரு அச்சடித்த "சர்வ கட்சித் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டம்" என்ற தலைப்பில் அழைப்பிதழ் வந்தது, அதில் தமிழக எல்லைப்பகுதியை மட்டும் குறிப்பிட்டு அதற்கென்று ஆலோசனைக்குழு நடத்தப்போவதாகவும் அக்குழு ஜனவரி 27 ந் தேதி மாலை 4 மணிக்கு 'உமா' பத்திரிகை அலுவலகத்தில் சர்வகட்சித் தலைவர்களின் ஆலோசனையின் பேரில் கூடுகிற தென்றும் அதற்கு வரவேண்டும் என்பதாகவும்எழுதி அதில் நண்பர் ம.பொ.சி யின் கையெழுத்து மட்டும் இருந்தது முதலில் என்னன்னமோ எழுதினார் முதலில் எழுதிய கடிதம் ஒன்றுடன் இணைத்திருந்த சர்வகட்சி தலைவர்களுக்கு அழைப்பு தகவலில் 5 பேர்களுக்குக் கையெழுத்திட இடம் ஒதுக்கி இருந்தார். அதில் அவர் இரண்டாவதாக கையெழுத்திட்டிருந்தார் அப்படி யிருந்தும் இன்றைக்கு திடீர் மாற்றமடைந்துவிட்டாரோ என்று யோசித்தேன் மேலும் **முதலில் பேசியபடி எந்தெந்த விஷயங்கள் சம்பந்தமாக கிளர்ச்சி என்பதையும் விட்டு இப்போது ஒன்றுக்கு மட்டும் கிளர்ச்சி என்பதாகவும் மேலும் தனக்கு சவுகரியப்பட்ட 'உமா' பத்திரிகை அலுவலகத்தில் கூடுவது என்பதும் அவருடைய முழுமாற்றத்தையும் தெரிவித்தது.**

இதற்கிடையில் அப்போது எங்கிலும் கிளர்ச்சிகள் நடந்து வருகின்றன, அங்கங்கே தந்திக் கம்பிகளை அறுப்பதும் தண்ட வாளங்களை பெயர்ப்பதும் ரயிலை நிறுத்துவதும் சட்டசபை மறியலும் நடந்து கொண்டிருக்கின்றன. இத்தனையும் நடந்து கொண்டிருக்கையில் அரசினரிடம் நடவடிக்கை எடுக்க திட்டம் வகுக்கப்படுகிறதாம்.

இப்படி மக்களை திடீரென்று ஒருவித முன் யோசனையும் இன்றி தூண்டிவிட்டு இத்தனை அக்ரமங்களையும் செய்யச் சொல்லி அதனால் ஒருவித பயனும் இல்லாமல் உள்ளே தள்ளப் பட்டது தான் கண்ட பலனாக இருக்க திடீரென்று அன்றைய ஆலோசனைக்கூட்டத்தின் தீர்மானப்படி இப்போது நடத்தப் படும் கிளர்ச்சியை வாபஸ் வாங்கிக்கொண்டு இதன் சம்பந்தமாக கவனிக்க ஒரு கமிஷனை ஏற்படுத்தி அதற்கு தலைவராக சர்.பி.டி ராஜனைத் தேர்ந்தெடுத்து இனி அந்தக் கமிட்டியின்படி ஆலோசிக்கப்படும் என்று கூறிவிட்டார்கள்.



நான் எனக்கு வந்த அழைப்பைக் கண்டவுடன் அழைப்பைக் கொண்டுவந்து கொடுத்த தோழர் உமாபதியிடம், "நண்பர் ம.பொ.சி சொல்லுகிற வார்த்தைக்கு மாறாகத்தான் நடந்து கொள்ளுதல் வழக்கம்போல் இருக்கிறது." என்று கேட்டேன் அதற்கு அவர் "எனக்கு ஒன்றும் தெரியாதே என்னைக் கேட்கிறீர்களே அவரையே கேளுங்கள்" என்று டெலிஃபோனில் ம.பொ.சி யைக் கூப்பிட்டார். நான் அவரிடம் "நீங்கள் என்ன என்னிடம் சொன்னீர்கள் இப்போது என்ன செய்கிறீர்கள்" என்று கேட்டேன் அதற்கு அவர் ஒரு காரணம் கூறினர். எனக்கு அவர் எழுதிய 20ம் தேதி கடிதம் 22ம் தேதி கிடைத்ததால் உடனடியாக ஒன்றும் பதில் தெரிவிக்க முடியாமற் போனதால் அதை ஒரு குறையாகக் குறித்து நீங்கள் தான் நான் எழுதுகிற கடிதம் வந்து சேரவில்லையென்று கூறுகிறீர்கள்! நான் என்ன செய்வேன் மேலும் மற்றவர்கள் எல்லாம் நீங்கள் கூறுகிறவை களின்படி ஏனையவைகளுக்கு சம்மதிக்க மறுக்கிறார்கள் எனவே நீங்கள் இக்குழுவில் கலந்து கொண்டு உங்கள் விருப்பத்தை தெரிவியுங்கள்'' என்றார். நான் அங்கு வருவதாகவும் இல்லை உங்கள் தேவையும் அவசியமில்லை என்று கூறி முடித்தேன்

**இப்படி நண்பர் ம.பொ.சி மாறுவதற்குக் காரணம் இருக்கிறது ஆச்சாரியார் தட்சிணப்பிரதேசத்தை ஆதரித்துப் பேசி, தட்சிணப்பிரதேசம் அமைக்கப்படவேண்டியது அவசியம் தான் என்றுகூறி இருக்கிறார் அன்றைய மறுதினமே நண்பர் ம.பொ.சி மாறிவிட்டார். நம்முடன் கலந்தால் அதையெல்லாம் எதிர்க்க வேண்டுமே என்பதற்காக மிகத்தந்திரமாக இப்படி மாறிவிட்டார்**

ஆனால் தட்சிணப்பிரதேசம் அமைக்கப்பட்டால் இவர்கள் அத்தனை பேரும் ஆதரித்தாலும் சரியே நான் மட்டும் விடப் போவதில்லை. அதை அறிக்கும் முயற்சியில் கடுமையாக திட்ட மிட்டிருக்கிறேன்.

# மொழிவாரிப் பிரிவினை : கலகத்துக்குக் காரணம் மத்திய அரசே!

**– பெரியார்**

..."பிரிவினைக்குப் பெயர் மொழிவாரி நாட்டுப்பிரிவினை. இதில் பிரிந்துபோகவேண்டுமென்று வாதாடுகிறவர்கள் மொழியை ஆதாரமாகக்கொண்டுதானே பிரிவினை கேட்க வேண்டும்? அதை விட்டுவிட்டு, வேறு மொழி 100 க்கு 69, 70, 80 வீதம் பேசுகிற மக்கள் உள்ள நிலையைத் தங்கள் நாட்டுடன் சேர்க்கவேண்டுமென்று கேட்பது எப்படி யோக்கியமாகும்? அல்லது இந்தப் பிரிவினைக்கு, மொழிவாரி மாகாணப்பிரிவினை என்றாவது எப்படிச் சொல்ல முடியும்?"

இந்த அழிவழக்குக்குக் காரணம் ஆந்திரர்கள் மட்டுமே அல்லர்; அதிகப்பங்கு மத்திய அரசாங்கத்தாருக்கே உண்டு. ஆந்திரருக்கு ஒரு கஷ்டம்தான். ஏதோ சில வசதிகள் போய் விடுகின்றனவே என்ற ஒரே கஷ்டம்தான். மத்திய அரசாங்கத்திற்கு இரண்டுவிதமான கஷ்டங்கள். என்னவென்றால், மத்திய அரசாங்கத்தைவிட்டுப் பிரிந்துகொள்ள வேண்டும் என்று ஒரு கிளர்ச்சி தமிழ்நாட்டில் இருக்கிறது. இவர்களைத் தனிமைப் படுத்தி விட்டால் கிளர்ச்சி வலுத்துவிடுமே என்கிற பயம். ஆந்திராவில் கம்யூனிஸ்டுகள் பலமும் காங்கிரஸ் எதிரிகள் பலமும் அதிகம். இவர்களைத் தனியாகப் பிரித்தால் அங்கு காங்கிரஸ் ஆட்சிக்கு இடமிருக்காதே என்ற பயம். எனவே கலகத்தை வளர்ப்பதில் முக்கியப் பங்கு மத்திய அரசாங்கத்திற்கு இருக்கிறது. இந்தப் பிரிவினைக் கிளர்ச்சியில் தமிழர்கள் செய்ய வேண்டியதெல்லாம், மத்திய அரசாங்கத்தை எதிர்ப்பதற்கு வசதி செய்து கொள்ள வேண்டியதுதான்.

நிற்க. ஒரு சங்கதியைத் தெளிவுபடுத்த வேண்டியது அவசியமாகும். பிரிவினையின் காரணமாக நம்மிடையே உரிமை விவகாரம் ஒன்றுமில்லை. அதாவது, ஆந்திரர்கள் இப்பொழுது அனுபவித்து வருவதற்கு மேலாகக் கேட்பது என்பதற்குக் காரணம் வேண்டும் என்பது ஒருபுறம் இருந்தாலும், ஆந்திரர்களே ஒரே குரலாக எல்லோரும் இப்போது அனுபவிப்பதற்கு மேலாக எங்களுக்கு ஒன்றும் வேண்டியதில்லை என்று சொன்னபிறகு - நமக்கு விவகாரமேது? அப்படிக்கேட்டாலும் நமக்கு ஆட்சேபம் இல்லை. எந்த அளவில் என்றால், ஆந்திர மொழியைப் பேசுகின்ற மக்களை மெஜாரிட்டியாகக்கொண்ட பகுதிகளை ஆந்திர நாட்டோடு சேர்த்துக் கொள்வதில் ஆட்சேபமில்லை. தமிழ் மொழி பேசும் மக்களை பெருவாரியாகக் கொண்ட நாட்டை ஆந்திராவோடு சேர்க்கவேண்டும் என்பது எப்படி, மொழிவாரி மாகாணப் பிரிவினை என்று சொல்லமுடியும்?

அடுத்தாற்போல், அதுபோலவே இன்றைய அனுபவத்தில் தமிழ்மொழி அதிகமாகப் பேசும் மக்களின் பிரதேசம் ஆந்திர நாட்டிலே சேர்ந்தாலுங்கூட, அவர்களுக்கு மொழிவாரிப் பிரதேச உரிமையை உத்தேசித்து எந்த நிமிஷத்திலும் விலக்கிக்கொள்ள கிளர்ச்சி செய்ய உரிமை உண்டு. அதை நாம் மறுக்கவில்லை; நம்மாலான உதவிகளைச் செய்யவும் தயாராக இருக்கிறோம். ஆனால் நம்முடைய சொந்தப் பிழைப்பையோ, சுயநலத்தையோ, விளம்பரத்தையோ உத்தேசித்து, இன்றைக்குத்தான் இந்தச் சங்கதி தெரிந்ததுபோல் பாவனை காட்டிக்கொண்டு கூத்தாட நமக்கு இஷ்டமில்லை. இது ஏதோ ஒரு அளவில் முடிவுபெறப்போகிற காரியத்தைத் தொல்லைப் படுத்துவதே ஆகும் என்று கருதுகிறேன்.

யோக்கியமான சர்க்காராய் இருந்தால், மொழிவாரிப் பிரதேச அமைப்பு என்பதின் பேரால் செய்யும் எந்தக் காரியத்தையும் இதில் ஜனநாயகம் இருக்கின்றதா? பெருவாரி யாகத் தெலுங்குமொழி பேசுகிற பிரதேசத்தைத்தான் நாம் சேர்க்கிறோமா? அல்லது பெருவாரியாகத் தமிழ்பேசகிற பிரதேசத்தைச் சேர்க்கிறோமா? என்பதை சிந்திக்க வேண்டியது அவர்கள் கடமையாகும். அதில் அவர்கள் தவறுவதை நியாயத்தவறு என்று சொல்லமுடியாது; நாணயத்தவறு என்றேதான் நான் சொல்ல வேண்டியிருக்கிறது.

மொழிவாரிப் பிரதேசப் பிரச்சனையின் தன்மை இவ்வாறு இருக்க, இனி மற்றப் பிரச்சனைகளைப்பற்றிச் சிந்திப்போம். அவை ஆந்திர இராஜ்ஜியத்தின் தலைநகர் சென்னையில் இருக்க வேண்டும் என்பதும்; பொது கவர்னர், பொது அய்க்கோர்ட் இருக்கவேண்டும் என்பதும்; சிறிது காலத்திற்காவது ஆந்திர அரசாங்கக் காரியாலயம் சென்னையிலேயே இருக்க வசதியளிக்கவேண்டுமென்பதும்; இவை ஒன்றுமே முடியா விட்டால் சென்னையைத் தனிஇராஜ்யம் ஆகச் செய்து அது ஆந்திராவுக்கும், தமிழ்நாட்டுக்கும் சம்பந்தமில்லாத டெல்லியைப் போன்ற ஒரு கமிஷனர் இராஜ்யமாக ஆக்கவேண்டுமென்றும் கேட்கப்படுபவைகளாகும்.

இவைகளைப் பார்க்கும்போது ஆந்திரர்களுக்கு இந்த விஷயங்களில் பொறுப்புள்ளதும் குறிப்பிட்டதுமான ஒரு யோசனையோ, இலட்சியமோ இல்லை என்பதாகவே தெரிய வருகிறது. ஆந்திராவின் தலைநகரம் சென்னையில் எதற்காக இருக்க வேண்டும்? இப்போது ஆந்திர நாடு அமைப்பு என்கிற பிரச்சனை ஒரு விடுதலைப்பிரச்சனையேயொழிய, பாகப் பிரிவினைப் பிரச்சனை அல்ல. எப்படியெனில், சென்னை இராஜ்யம் 4 மொழி வாரிப் பிரதேசங்களாகப் பிரிப்பட்டிருக்கிறது. நாலில் ஒன்றுதான் ஆந்திரா. இப்பொழுது ஆந்திராதான் மற்ற மூன்றையும் விட்டு விலகிக்கொள்கிறது. ஆகவே இந்த விலகிக்கொள்ளுதல், சென்னை இராஜ்யத்திலிருந்து விடுதலை பெறுதல் என்பது அர்த்தமாகும். விடுதலை செய்து கொண்டு போகிறவர்கள், விடுதலைசெய்து கொண்டு போகவேண்டுமே தவிர, மறுபடியும் ஒன்றாக இருக்க வசதி கேட்பது பொருத்தமற்ற காரியமாகும். ஒரு குடும்பத்தில் ஒருவருக்கொருவர் பிடிக்காமல், ஒருவர் வெளியேறுகிறேன் என்று சொல்லிவிட்டு, அதே அடுப்பிலே நானும் சமையல் செய்து கொள்ளுகிறேன் என்றால் அது கலகத்துக்கு வசதி செய்வதாகுமே தவிர வாழ்க்கைக்கு வசதியாகாது. அன்றியும், ஒரு இராஜ்யத்திற் குள்ளாக இன்னொரு இராஜ்யத்தின் தலைநகரம் இருப்பது நிர்வாகத்துறையில் நிர்வாகக்குறைவும், இராஜதந்திரக்குறைபாடும் ஏற்படும்.

இவைகளையெல்லாம் ஒன்றாகவோ ஒன்றிலேயோ இருக்க வேண்டும் என்று கருதுகிறவர்கள் எதற்காகப் பிரியவேண்டும் என்று என்று கருதுகிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. ஏதாவது ஒரு வகையில் தொல்லை ஏற்படும்படி செய்யவேண்டும். அல்லது தந்திரமான வழியில் ஆக்கிரமிப்புச் செய்துகொள்ள வேண்டும் என்பதைத்தவிர வேறு உண்மையான எண்ணம் ஒன்றும் இருக்க முடியாது என்பதுதான் எனது கருத்து.

இவைகளையெல்லாம்விட நாம் கவனிக்கவேண்டிய சங்கதி ஒன்ற இருக்கிறது. ஏதோ காரணம் சொல்லி நாம் இவர்களை உள்ளேஇருக்கச் சம்மதிப்போமேயானால், பிறகு இவர்களை எப்படி வெளியேற்றுவது? அதற்கு என்ன சட்டம் இருக்கிறது? ஆகவே இந்தப்பிரச்சனைகள் பெரும் தொல்லைக்கு இடமான பிரச்சனைகளேயாகும்; இதில் எந்தவிதமான உண்மையும் இல்லை என்பதே எனது கருத்து.



இரண்டு நாட்களுக்குமுன் மேயர் வீட்டில் நடந்த சர்வ கட்சிக் கூட்டம் என்பதிலும் நான் பேசியபோது இதையே சொல்லியிருக்கிறேன். அதாவது, இந்தப்பிரிவினையில் ஏற்படுகிற தொல்லைகள் எல்லாம் மத்திய அரசாங்கத்தாலும், மத்திய அரசாங்கத்தில் செல்வாக்கு உடையவர்களாலும் ஏற்படுகிற தொல்லைகளே தவிர, வேறு ஆந்திர மக்கள் தொல்லை அல்ல. ஆதலால் இதே சமயத்தில் தமிழ்நாட்டின் நிலைமை இன்ன தென்றும், தமிழர் விருப்பம் இன்னதென்றும் தெரிவித்துவிட வேண்டியது அவசியம் என்றும்; அந்தப்படி நடக்காதபட்சம் தமிழர்களுடைய அதிருப்திக்கு மத்திய அரசாங்கம் ஆளாக வேண்டிவருமென்றும் ஒரு தீர்மானம் போடவேண்டும் என்றும் சொன்னேன்.

பிரிவினை விஷயத்தில் என் கருத்து உங்கள் எல்லோருக்கும் தெரியும். பூரணவிடுதலை, பிரிவினை வேண்டும் என்பவன் நான். அந்த அளவில் எவ்வளவு எல்லை குறைத்துக் கிடைத்தாலும் கவலை இல்லை என்று சொன்னவன் நான். இன்று காலை யிலுங்கூட டாக்டர் A.கிருஷ்ணசாமி அவர்களிடம், எனக்குச் சென்னை நகரம் முக்கியமல்ல; அன்னியன் ஆதிக்கமற்ற, அன்னியன் சுரண்டலற்ற பூரண சுயேட்சையுள்ள பிரதேசம் எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அதுதான் தேவை என்று சொன்னேன். ஒரு சமயம் சென்னை போய்விடுமானாலும் நான் ஒன்றும் அதிகமாகக் கவலைப்பட மாட்டேன் என்றும், சென்னை ஒழிந்து போனால் பாக்கி உள்ள தமிழ்நாட்டை என் இஷ்டம்போல ஆக்கி நாளைக்கே பூரண விடுதலைபெற்ற பிரதேசமாக ஆக்க விளம்பரம் செய்துவிட முடியும் என்று சொன்னேன். ஆனால், நான் விஸ்தீரணத்துக்காகப் போராடு கிறவன் அல்லன்; சுதந்திரத்துக்காகப் போராடுகிறவன் என்றாலும் இதில் ஏன் சம்மந்தப்படுகிறேன் என்றால் மொழிவாரி என்று சொல்லிக்கொண்டு போகிறவர்கள் மொழிவாரியாகவும் பிரித்துக் கொண்டு மொழி அல்லாத நாட்டிலும் ஆதிக்கம் செலுத்தப் பார்க்கிறார்களே என்ற ஒரு கருத்துத்தானே அல்லாமல், மற்றபடி சென்னை நகரம் தமிழருக்கோ, தமிழ்நாட்டுக்கோ பெரிய தொண்டு செய்திருக்கிறது; செய்து வருகிறது, அல்லது செய்ய முன்வரும் என்பதற்காக அல்ல என்றும் சொன்னேன்.

மற்றும் இவை ஒரு பக்கம் இருந்தாலும் நாம் பிரயத்தனப் படாவிட்டால் சென்னை நகரம் ஆந்திரர்களுக்குப் போய் விடுமோ என்கிற கவலை சிறிதும் வேண்டியதில்லை. ஏனெனில் அநேகமாகத் தமிழ்நாட்டு பிராமணர்கள் சென்னையில்தான்

வாழ்கிறார்கள். அவர்கள் ஒருநாளும் சென்னை ஆந்திராவுடன் சேரவோ, தனி மாகாணமாக ஆக்கவோ சம்மதிக்க மாட்டார்கள். அவர்கள் இதில் வெற்றிபெற்றே தீருவார்கள். ஆதலால் நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை என்று இன்று காலையில் சொன்னேன். மற்றும், இது விஷயமாக என்னிடம் பேசவந்த பலரிடத்திலம் இந்தப்படியே பேசியிருக்கிறேன். அதற்காக அவர்கள் என்னிடத்தில் அதிருப்தி கொண்டதாகவும் காட்டினார்கள்.

*விடுதலை - 07.01.1953, 08.01.1953*

## மலையாளிகளின் தொல்லையே மாபெரும் தொல்லையாகும்!

**- பெரியார்**

என்னுடைய 76-வது பிறந்தநாளாகிய இன்று ஒரு அறிக்கை விடவேண்டும் என்று என் தோழர்கள் கேட்டுக்கொண்டார்கள். அதை அனுசரித்து இன்றைக்கு முக்கியமான பிரச்சனை என்றும் இனி நாம் அதிகமாக கவலை செலுத்த வேண்டிய பிரச்சனை என்றும் கருதுகிற ஒரு விசயத்தைப்பற்றி பொதுமக்களுக்கு எனது வேண்டுகோளாக தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன்.

தோழர்களே தமிழ்நாட்டை வடநாடு பொருளாதாரத் துறையில் பெருங்கொள்ளை அடிப்பதோடு தமிழ்நாட்டை பொருளாதாரத் துறையிலும், தொழில்துறையிலும் தலையெடுக்க ஒட்டாமல் மட்டந்தட்டிக்கொண்டு வருகிறது. இந்த ஒரு முக்கிய மான காரியத்துக்காகவே வடநாட்டான் அரசியலிலும், தமிழ் நாட்டை தனக்கு அடிமைப்படுத்தி தனது காலடியில் வைத் திருக் கிறான். இதற்கு அனுகூலமாக இந்நாட்டு பார்ப்பனர்கள் தங்களுக்கு இனி இந்நாட்டில் ஆதிக்கம்பெறவோ, இதுவரை யிலும் வாழ்ந்ததுபோன்ற ஆதிக்க வாழ்வு வாழ முடியாது என்று கருதி வடநாட்டானுக்கு அவனது அரசியல், பொருளாதார ஆதிக்கத்துக்கு தமிழ்நாட்டைக் காட்டிக்கொடுப்பதற்கு உடந்தை யாகவும், உள் ஆளாகவும் இருந்து வருகிறார்கள். இந்த காரணங் களுக்காகவே வடநாட்டான் ஆதிக்கத்திலிருந்து தமிழ்நாட்டை விலக்கி சுதந்திரத்தமிழ்நாடாக ஆக்க வேண்டும் என்றும், நாட்டைக் காட்டிக்கொடுத்து பிழைக்கும் சமுதாயமாகிய



பார்ப்பனச் சமுதாயத்தை தமிழ்நாட்டிலிருந்தே வெளியாக்கிவிட வேண்டுமென்றும் நான் உறுதியாகக்கருதி என்னாலான முயற்சி களை திராவிடர்கழகத்தின் மூலம் தொண்டாற்றி வருகிறேன்.

இது ஒருபுறமிருக்க இந்த சந்தர்பத்தையும் நடப்புக்களையும் ஆதரவாகக்கொண்டு உள்நாட்டிலேயே சில கொள்ளைக் கூட்டங்கள் தோன்றி வசதிபட்ட அளவுக்குக்கூட தமிழனை தலையெடுக்கவொட்டாமல் செய்து வருகின்றன. இங்கு சற்று விவராமக சொல்லவேண்டியிருக்கிறது. இந்த நாட்டு அரசியலில் வெள்ளையன் இருந்த காலம் முதற்கொண்டே பார்ப்பனர்கள் ஏகபோகம் ஆதிக்கம் பெற்று தமிழர்களுக்கு சிறிதும் நல்வாய்ப் பில்லாமல் தமிழர்கள் அழுத்தப்பட்டு வந்திருப்பதைக் கண்டிக்கும் முறையில் இந்நாட்டு தமிழ் மக்களால் நான் அறிய 1890-ஆம் ஆண்டிலிருந்தே பெருங்கிளர்ச்சி செய்யப்பட்டு வந்திருக்கிறது. உதாரணமாக 1892-லும், 1893-லும் சென்னை மாகாணத்தில் கவர்னராயிருந்த லார்டு வென்லக் துரை அவர்களுக்கு இந்நாட்டு தமிழ் (திராவிட)ப் பெருங்குடி மக்களின் பெயரால் கவர்னருக்கு பகிரங்கக்கடிதம் என்பதாக குறிப்பிட்டு இரண்டு கடிதங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளின் நகல் என்கைவசம் இருக்கின்றன. அக்கடிதங்களில் சமுதாயத் துறையிலும், அரசியல் துறையிலும் பார்ப்பனர் ஆதிக்கத்தையும், கொடுமையையும் ஆதாரப்பூர்வமாக புள்ளிவிவரங்களோடு எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. மற்றும் அக்கடிதத்தில் அவற்றை அனுசரித்து மெயில் முதலிய பத்திரிக்கைகளின் கருத்துக்களையும் டாக்டர் மில்லர் போன்ற பெரியோர்களின் கருத்துக்களையும் எடுத்துப் போட்டு காட்டப்பட்டிருக்கின்றன.

இதை எதற்காக குறிப்பிட்டேன் என்றால் பார்ப்பன ஆதிக்கமும், கொடுமையும் பற்றி சொல்வது ஜஸ்டிஸ்கட்சி ஏற்பட்ட பிறகோ, அல்லது சுயமரியாதை இயக்கம் ஏற்பட்ட பிறகோ அல்லவென்றும், 1890-லேயே நம்மவர்கள் உணர்ந்து முறையிட்டிருக்கிறார்கள் என்பதை எடுத்தக்காட்டுவதற்காகவே.

நிற்க, இத்தொல்லைகள் அல்லாமல் தமிழர்களுக்கு தமிழ்நாட்டிலே மற்றொரு தொல்லை வளர்ந்துகொண்டே வந்திருக்கிறது. அது என்னவென்றால் உத்தியோகத்துறையில் - தமிழன் ஃபார்;ப்பனரல்லாதானஃ; என்கிற பெயரால் தனக்குறிய பங்கை வலியுறுத்த ஆரம்மித்த பிறகு பார்ப்பனர் அதை எதிர்த்து ஒடுக்கும் வகையில் தங்களால் ஆனவற்றையெல்லாம் செய்து

ஒடுக்கிபின் மீதி- அதாவது பார்ப்பனரல்லாதவருக்கு ஏதாவது சலுகைகாட்டி பதவிகொடுத்துத்தான் தீரவேண்டும் என்ற நிலைமை நிர்பந்தம் ஏற்பட்ட சந்தர்பத்தில் பார்ப்பனரல்லாதார் என்று சொல்லிக்கொண்டு சில பதவிகளை வெள்ளையனுக்கு கொடுப்பதும்: அவனுக்கு கொடுப்பது மக்களுக்கு இஷ்டமில்லை என்றால் வெளி மாகாணக்காரர்களுக்கு கொடுப்பதும், அவர்களுக்குகொடுப்பதும் சாத்தியப்படாத சந்தர்பங்களில் கிறிஸ்தவர், முஸ்லிம்கள் ஆகியவர்களுக்கு கொடுப்பதும்: அது சாத்தியப்படாத சந்தர்ப்பங்களில் ஆந்திரர், மலையாளி, கருநாடகர் ஆகியவர்களுக்கு கொடுப்பதுமாய் சூழ்ச்சிசெய்து தமிழர்களுக்கு எவ்வளவு கொடுமையும், குறைபாடும் செய்யவேண்டுமோ அந்த அளவுக்கு செய்து வந்தார்கள். வெள்ளையன் அரசாங்கமும் இவர்களுக்கு ஆதரவுகொடுத்தே வந்திருக்கிறது.

இப்போது வெள்ளையன் ஆட்சி ஒழிந்துவிட்டது: இந்தியன் ஆட்சி என்று ஏற்பட்டுவிட்டது. அதோடு நாடும் பல விதத்திலும் வடநாடு- தென்னாடு என்று பிரிந்துவிட்டது. அது மாத்திரம் அல்லாமல் மொழிவாநாடு என்னும் பேரால் ஆந்திரநாடும் தமிழ்நாட்டை வி;ட்டுப் பிரிந்துவிட்டது. இதனால் ஆந்திரர்கள் தொல்லை அரசியலிலும், உத்தியோகங்களிலும் ஒரு அளவிற்கு ஒழிந்து விட்டது என்றாலும் கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், மலையாளிகள், கர்நாடகர்கள் என்பவர்களது தொல்லை அரசியல் ஆதிக்கத்திலும் உத்தியோகத்திலும் ஒழிந்தபாடில்லை.

இதை ஏன் சொல்கிறேனென்றால், தமிழ்நாடு மொத்த ஜனசங்கையில் பார்ப்பனர் 100 க்கு இரண்டேமுக்காலும், கிறிஸ்தவர் 100 க்கு 4-ம், முஸ்லிம்கள் சுமார் 100 க்கு 5-ம், மலையாளிகள் சுமார் 100 க்கு 8-ம், கர்நாடகர்கள் 100 கருக 5-ம் (இவைகள் உத்தேசமான புள்ளிகள்) இவ்வளவு பேரும் சேர்ந்து, ஜனசங்கியையில் தமிழ்நாட்டார் -தமிழர் அல்லாதவர்கள், 100க்கு 25-பேர்களுக்கு உட்பட்டவர்களாகவே இருந்தாலும் இந்த கூட்டத்தினர் ஒவ்வொருவரும் நீதி நிர்வாக தலைமை உத்தியோகங்களில் சுமார் 100க்கு 60 - பேர்களாகவும், முக்கியமான உயர்ந்த உத்தியோகங்களில் 100க்கு 75-பேர்களாகவும் இருக்கிறார்கள். இதை ஏன் பிரித்துக் குறிப்பிட்டுக்காட்டுகிறேன் என்றால் தமிழ்நாட்டிலே தமிழர்களைத் தவிர, அதாவது மேற்படி கூட்டத்தினர் தவிர்த்த தமிழர்களைப் பற்றியாவது, தமிழர்களின் பழக்கவழக்க, கலாச்சார குறைபாடுகளைப் பற்றியாவது,



சமுதாயத்துறையில் அவர்களுக்குள்ள இழிவைப் பற்றியாவது, அரசியல், கல்வி, பொருளாதாரத் துறையிலாவது, மேலேகாட்டிய இந்தக்கூட்டத்தாருக்கு சிறிதும் கவலையில்லை என்பதோடு, பெரிதும் மாறுபட்டவர்கள் என்றும் சொல்ல வேண்டியிருக் கிறது. தமிழர்கள் சமுதாயத் துறையில் கீழான சாதியராக - சூத்திரர்களாக இருப்பதைப்பற்றி இவர்கள் யாருக்கும் கவலை யில்லை. எப்படியாவது தங்களுக்கு தங்கள் விகிதத்துக்கு மேற் பட்ட எண்ணிக்கையளவு பதவிகள் கிடைப்பதனால் தமிழன் கதி எக்கேடு கெட்டாலும் இவர்கள் இலட்சியம் செய்பவர்கள் அல்லர். அவரவர்கள் தங்கள் தங்கள் சமூகத்துக்கு எப்படி நடந்து பயன்பெறுவது என்பதையே பெரும்பாலும் இலட்சியமாகக் கொண்டவர்கள் ஆவார்கள். அப்படியே இருந்தும் வந்திருக் கிறார்கள். அதனால்தான் எந்த விதத்திலும் தங்களைவிட தனிப் பட்ட யோக்கிதை இவர்களுக்கு இல்லாமலிருந்தும் தமிழர் களைவிட இவர்கள் 3 பங்கு ஆதிக்கத்தில் பதவியில் இருந்து வருகிறார்கள்.

இதில் **குறிப்பாகக்கூற வேண்டுமேயானால் மலையாளி களின் தொல்லையே மாபெரும் தொல்லையாகும். அவர்கள் பெரும்பாலும் ஆரியக்கலாச்சாரத்தையும், ஆரிய மொழியையும்;, ஆரிய வர்ணச்சிரம தர்மத்தையும் ஆதரிக்கிறவர்கள், ஆனதனால் வகுப்புவாரி உரிமையில் மலையாளிகளை பார்ப்பனரல்லாத இந்துக்கள் என்கின்ற பிரிவில் பார்ப்பனர்கள் சேர்த்துக்கொண்டு பார்ப்பனரல்லாதார் என்கிற கணக்கில் ஏராளமான மலையாளி களுக்கு கொடுப்பதையே - அவர்கள் தாராளமாக வந்து புகு வதையே பார்ப்பனர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் - அனுமதிக் கிறார்கள். அதன் காரணத்தால் ஏறக் குறைய பார்ப்பனரில்லாத பெரும் பதவிகளிலும் மலையாளிகளே அமர்த்தப்பட்டிருக் கிறார்கள்.** முதலில் ஒரு சில உதாரணங்களைக் கூறுகிறேன்.

சென்னை அரசாங்க நிர்வாகத்தின் தலைமைப் பீடாதிபதி யான, சீப்செக்ரட்டரி: திரு.ராமுண்ணிமேனன், சீப் எஞ்சினியர்: திரு. கே. நம்பியார், சூப்பரின்டெண்டிங் எஞ்சினியர்கள்: 1. திரு.நாயக், 2.திரு.காமத், வைத்திய இலாக்கா: எழும்பூர் பிள்ளைப்பேறு ஆஸ்பத்தரி சூப்பரின்டெண்ட்டு: திரு.ஆர்.கே.கே. தம்பான: அசிஸ்டெண்ட் சூப்பிரின்டெண்ட்: திரு.கிருஷ்ண மேனன்: ஸ்டான்லி ஆஸ்பத்திரி சூப்பரின்டெண்ட்; திரு.கே.என். பிஷரொட்டி: பெண்கள் ஆஸ்பத்திரி, திருவல்லிக்கேணி, சூப்பரின் டெண்ட்:திருமதி. பாருகுட்டிராமன்.

*கல்வி இலாக்கா:- பிரஸிடென்சி கல்லூரிபிரின்ஸ்பால்: திரு. பாலகிருஷ்ணநாயர்,குவீன்மேரீஸ் கல்லூரி: திருமதி.லேடி வெலிங்டன்: திருமதி.வர்கிஸ். சட்டக்கல்லூரி டைரெக்டர்: திரு.குன்னிராமன். இவை - ஒருசில நிர்வாக அடிப்படைப் பதவிகளிலுள்ள மலையாளிகளை உதாரணத்துக்கு எடுத்துக் காட்டப்பட்டன.*

*இனி மாவட்ட (ஜில்லா) தலைமைப் பதவிகளிலுள்ள மலையாளிகள் எண்ணிக்கையைக் காட்டுவதற்கு போலிஸ் இலாக்கா ஒன்றை மாத்திரம் உதாரணமாக எடுத்துக் காட்டுகிறேன். இவைகளிலிருந்து மற்ற இலாக்காக்களையும் தெரிந்து கொள்ளுங்கள். இதில் 13-ஜில்லாக்களோடு சென்னையைச் சேர்த்தால் 14-ஆகும். இவற்றில், சென்னையி;ல் கமிஷனர்: திரு.பார்த்தசாரதி அய்யங்கார் என்ற ஒரு பார்ப்பனர் இருப்பது மாத்திரமல்லாமல் அடுத்த பதவியான டிப்டி கமிஷனர் என்பதில் மூன்றிலும் மூன்று மலையாளிகள் இருக்கிறார்கள். அவர்கள் முறையே1. திரு. அடிகை(லா அண்டு ஆர்டர்), திரு.தாமோதரன் (கிரைம்),3. திரு.சுகுமாரன் (டிராபிக்). ஆய்ஜிக்கு அசிஸ்டெண்ட்;: திரு.வி.பி.நாயர். அசிஸ்டெண்ட் கமிஷனர்கள்: 1. திரு.செதுமாதவமேனன்(லா அண்டு ஆர்டர்), 2. திரு. சேதுமாதவநாயர்;: (புரொகிபிஷன்). இனி ஜில்லாக்களில் போலிஸ்சூப்பரின்டெண்ட்டுகள்: திருச்சி: திரு. விஸ்வநாத அய்யர்: மதுரை(வ)திரு. ஏ.சி.நம்மியார்: திருநெல்வேலி: திரு. மாப்ளா அப்துல்லா. வடஆர்க்காடு திரு. ஷெனாய், சேலம்:திரு.பாலக்கிருஷ்ணமேனன், நீலகிரி: மாப்ளாரூக்கி இவைதவிர மற்ற ஜில்லாக்களிலும் அய்யர், அய்யங்கார்கள். அதாவது மதுரை(தெ)திரு.கிருஷ்ணசாமி அய்யர்: இராமநாத புரம்: திரு. நரசிம்ம அய்யங்கார், மலபார்;: திரு. இராமானுஜ அய்யங்கார், தென்கன்னடம்: திரு. முத்துசாமி அய்யர். மீதியுள்ள ஜில்லாக்களில் இரண்டில் ஆங்கிலோ கிறிஸ்த்தவர்களும், ஒரே ஒரு ஜில்லாவில், தென்னாற்காட்டுக்கு மட்டும் திரு. பாலக்கிருஷ்ண உடையார் என்ற தமிழரும் இருந்து வருகிறார்கள். இவர் பதவியும் ஆட்டத்தில் இருக்கிறது.*

*இவை தவிர அரசாங்க போலீஸ் இலாக்கா (போர்ட் போலியோ) நிர்வாகத் தலைமையில், செரட்டரி: திரு. ஆர்.ஏ. கோபால்சாமிஅய்யங்கார்: டிப்டி செக்ரட்டரி:டி.ஏ. சுப்புசாமி அய்யர் ஆகிய இரண்டு பார்ப்பனர் இருப்பதுபோக மற்றும் இரண்டு டிப்டி செக்ரட்டிரிகள்.:-1.திரு.ஒய்.சிவராம மேனன், 2.திரு.சி.ஆர்.பணிக்கர்.மற்றும் பப்ளிக் (பொலிடிகல்) என்று கூறப்படும் இரகசிய நிர்வாகத் தலைமையில் செக்ரட்டரி: திரு.டி.என். இலட்சுமிநாராயண அய்யர்;: அண்டர் செக்ரட்டரி: திரு. ஆர். பாலசுப்பரமணி அய்யர்.அரசாங்கத்தலைமை ஸ்தாபனங்கள் இந்தப்படி அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை உதாரணங்களாக எடுத்துக்காட்டப்பட்ட ஒரு சிலவேயாகும்.*

*மற்ற இலாக்காக்களிலும்100க்கு90பேர்களான தமிழர்களைத் தவிர மற்ற சமுதாயக்காரர்களே அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.* **இந்த நிலைமை இதற்கு முன்பே இருந்துவந்தாலும் இவ்வளவு மோசகரமான நிலைமை, அதாவது செக்ரிட்டேரியட், போலிஸ்- முதலியவற்றில் இவ்வளவு மோசகரமான நிலைமை - திரு. ஆச்சாரியார் அவர்கள் காலத்தில் ஏற்பட்டதாகவே தெரிகிறது.** *இங்கே பொதுமக்கள் சிந்திக்கவேண்டும்- தமிழனுக்கு ஆட்சியில் இடமெங்கே? தமிழன் வாழ்வில் ஆட்சியின் உதவி தேடுவதற்கு வழி எங்கே? தமிழனை பழிவாங்கும் தன்மையிலே இந்த நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத்தவிர வேறு காரணம் ஒன்றும் காணோம். ஆகையால்,* **ஒவ்வொரு இனத்தாரும், ஒவ்வொரு ஜில்லாக்காரர்களும் பிரிந்து மொழிவாரி மாகாண நாடு பெறும் வரையில் பதவிகள் ஜில்லா விகிதமாவது அந்தந்த ஜில்லா அடையும்படி செய்யவேண்டியது அவசிய மாகிறது.** *சமீபகாலத்தில் திருவாங்கூர் - கொச்சி இராஜ்ஜியத்தில் தமிழர் உரிமை கேட்டதற்காக, தமிழர்களை அந்தநாட்டு மலையாளிகள் நடத்திய விதத்தைப்பார்த்தால், குறைந்தளவு நாம் நமது உரிமைக்காவது பாடுபடக்கூடாதா என்று தோன்றுகிறது. இந்த உணர்ச்சியின் பெயரால்தான் இந்த எண்ணங்கள் நமக்குத்தோன்றுகின்றன. ஆகவே தமிழர் இவற்றைப்பற்றி நல்ல வண்ணம் யோசி;த்து, கட்டுப்பாடான கிளர்ச்சி செய்வதன் மூலம் பரிகாரம் பெறவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். இதுவே என்னுடைய பிறந்தநாள் விழா வேண்டுகோள்.*

***விடுதலை – அறிக்கை – 17.09.1954***

# தமிழ்நாடா...சென்னை நாடா?

**– பெரியார்**

இந்தப்பிரிவினை அமைப்பு ஏற்பாட்டில் எனக்கிருக்கும் சகிக்கமுடியாத குறை என்ன இருக்கிறது என்றால், நாட்டினுடையவும், மொழியினுடையவும், இனத்தினுடையவும் பெயர் அடியோடு மறைக்கப்பட்டுப் போய்விடுகிறதே என்கிற குறைபாட்டு ஆத்திரந்தான். நம் நாட்டுக்கு, சமுதாயத்திற்கு, இனத்திற்கு 'திராவிடம்' என்று இருந்த பெயர், அது தமிழல்ல என்பதானாலும், நமக்கு அது ஒரு பொதுக்குறிப்புச்சொல்லும், ஆரிய எதிர்ப்புச் சொல்லுமாக இருக்கிறதே என்று வலியுறுத்திவந்தேன். அதை ஆந்திர, கர்நாடக, கேரள நாட்டு மக்களல்லாமல் தமிழ் மக்கள் சிலரும் எதிர்த்தார்கள். பின்னவர்கள் என்ன எண்ணங்கொண்டு எதிர்த்தாலும், அவர்களுக்கு மற்ற மூன்று நாட்டார் ஆதரவு இருந்ததால் அதை வலியுறுத்துவதில் எனக்குச் சிறிது சங்கடமிருந்தது. அவர்கள் மூவரும் ஒழிந்தபிறகு அவர்களையும் சேர்த்துக்குறிப்பிடத்தக்க ஒரு சொல் நமக்குத் தேவை இல்லை என்றாலும், **'திராவிடன்' என்ற சொல்லை விட்டுத் தமிழன் என்று சொல்லியாவது தமிழ் இனத்தைப் பிரிக்கலாமென்றால், அது வெற்றிகரமாக முடிவதற்கு இல்லாமல் பார்ப்பான் (ஆரியன்) வந்து, 'நானும் தமிழன்தான்' என்று கூறிக் கொண்டு உள்ளே புகுந்துவிடுகிறான்.**

இந்தச் சங்கடத்திற்கு, தொல்லைக்கு என்ன செய்வது என்று யோசித்துக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும்போது, இப்போது மற்றொரு மாபெருந்தொல்லை நெஞ்சில் இடிவிழுந்தது போன்று வந்து தோன்றி இருக்கிறது.

அதுதான் திராவிடத்தை அல்லது தமிழ்நாட்டைவிட்டு ஆந்திரர், கர்நாடகர், மலையாளிகள் பிரிந்துபோன பின்புகூட, மீதியுள்ள - யாருடைய ஆட்சேபணைக்கும் இடமில்லாத தமிழகத்திற்குத் 'தமிழ்நாடு' என்ற பெயர்கூட இருக்கக்கூடாதென்று பார்ப்பானும், வடநாட்டானும் சூழ்ச்சி செய்து, இப்போது அந்தப்பெயரையே மறைத்து ஒழித்துப் பிரிவினையில் 'சென்னை நாடு' என்று பெயர் கொடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.



இது சகிக்கமுடியாத மாபெரும் அக்கிரமமாகும். எந்தத் தமிழனாலும் அவன் எப்படிப்பட்ட தமிழனானாலும் இந்த அக்கிரமத்தைச் சகித்துக்கொண்டிருக்கமாட்டான் என்றே கருதுகிறேன். அப்படி யார் சகித்துக் கொண்டிருந்தாலும் என்னால் சகித்துக்கொண்டிருக்க முடியாதென்று சொல்ல வேண்டியவனாய் இருக்கிறேன்.

இதைத்திருத்த, தமிழ்நாடு மந்திரிகளையும், சென்னை, டில்லி, சட்டசபை கீழ்மேல்சபை அங்கத்தினர்களையும் மிகமிக வணக்கத்தோடு இறைஞ்சி வேண்டிக்கொள்கிறேன்.

மற்றும் தமிழ்நாட்டிலுள்ள புலவர்கள், பிரபுக்கள், அரசியல் சமுதாய இயல் கட்சிக்காரர்களையும் முயற்சிக்கும்படி அதுபோலவே வேண்டிக்கொள்கிறேன்.

'தமிழ்', 'தமிழ்நாடு' என்கின்ற பெயர்கூட இந்நாட்டுக்கு, சமுதாயத்திற்கு இருக்க இடமில்லாதபடி எதிரிகள் சூழ்ச்சிசெய்து வெற்றிபெற்றுவிட்டார்கள் என்கின்ற நிலைமை ஏற்பட்டுவிடுமானால், பிறகு என்னுடையவோ, என்னுடைய கழகத்தினுடையவோ, என்னைப் பின்பற்றும் நண்பர்களுடையவோ வாழ்வு வேறு எதற்காக இருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லை.

இந்தக்காரியம் மாபெரும் அக்கிரமமான காரியம் என்பதோடு, மாபெரும் சூழ்ச்சிமீது செய்யப்பட்ட காரியம் என்றே கருதுகிறேன். நம்நாடு எது? நமது மொழி எது? நமது இனம் எது? என்பதையே மறைத்துவிடுவதென்றால், பிறகு தமிழன் எதற்காக உயிர் வாழவேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை. ஆகவே, இக்கேடு முளையிலேயே கிள்ளப்பட்டு விடும்படி முயற்சி செய்யும்படியாக எல்லாத் தமிழர்களையும் உண்மையிலேயே வணங்கி வேண்டிக்கொள்கிறேன்.

***விடுதலை – 11.10.1955***

# நம்முடைய வாழ்வு எதற்காக?

**– பெரியார்**

*பொதுவாக, ஆந்திரா பிரிந்ததிலிருந்தே நாட்டுப் பிரிவினையில் எனக்குக் கவலையில்லாமல் போய்விட்டது. பிறகு கன்னடமும் மலையாளமும் ( கர்நாடகாவும், கேரளாவும்) சீக்கிரத்தில் பிரிந்தால் நல்லது என்கின்ற எண்ணம் தோன்றி விட்டது.*

*கன்னடியருக்கும், மலையாளிக்கும் இனப்பற்றோ. சுயமரியாதையோ இல்லை; மத்திய ஆட்சிக்கு அடிமையாய் இருப்பது பற்றி அவர்களுக்குச் சிறிதும் கவலையில்லை. மேலும் சென்னை மாாணத்தில் 7 இல் 1 பாகத்தினராக இருந்துகொண்டு, தமிழ்நாட்டில் அரசியல், பொருளாதாரம், உத்தியோகம் முதலியவைகளில் 3 இல் 2 பாகத்தை அடைந்துகொண்டு இவை கலந்திருப்பதால் நம்நாட்டைத் ‘ தமிழ்நாடு’ என்றுகூடச் சொல்வதற்கு இடமில்லாமல் தடுத்து ஆண்டுகொண்டிருக் கிறார்கள். ஆதலால், இவர்கள் சீக்கிரம் பிரியட்டுமென்றே கருதி வந்தேன். அந்தப்படியே பிரிய நேர்ந்துவிட்டார்கள். ஆதலால், நான் இந்தப் பிரிவினையை வரவேற்கிறேன்.*

*இந்தப் பிரிவினை நடப்பதில் சேர்க்கை சம்மந்தமாக ஏதாவது சிறு குறைபாடு இருந்தாலும் மேற்கண்ட பெரும் நலத்தை முன்னிட்டு கூடுமானவரை ஒத்துப்போகலாம் என்றே எனக்குத் தோன்றிவிட்டது. மற்றும், இந்தப்பிரிவினை முடிந்து தமிழ்நாடு தனியாக ஆகிவிட்டால், நமது சமய, சமுதாய, தேசிய, சுதந்திர முயற்சிக்கும் அவை சம்பந்தமான கிளர்ச்சிக்கும், புரட்சிக்கும் நமது நாட்டில் எதிர்ப்பு இருக்காதென்றும், இருந்தாலும் அதற்குப் பலமம் ஆதரவும் இருக்காது என்றும் கருதுகிறேன்.*

*ஆனால், நாட்டினுடையவும், மொழியினுடையவும், இனத்தினுடையவும் பெயர் அடியோடு மறைக்கப்பட்டுப் போய்விடுகிறதே என்கின்ற குறைபாடு எனக்கு இருக்கிறது.*

*ஆந்திரர், கர்நாடகர், மலையாளிகள் பிரிந்துபோனபின்பு, மீதியுள்ள யாருடைய மறுப்புக்கும் இடமில்லாத தமிழகத்திற்குத் ‘தமிழ்நாடு’ என்ற பெயர்கூட இருக்கக்கூடாது என்று, அந்தப் பெயரையே மறைத்து, ஒழித்துப் பிரிவினையில் ‘ சென்னைநாடு’ என்று பெயர் கொடுத்திருக்கிறதாகத் தெரியவருகிறது.இது சகிக்க முடியாத மாபெரும் அக்கிரமமாகும்; எந்தத் தமிழனும் இதைச் சகிக்கமுடியாது.*

*இதைத்திருத்த, தமிழ்நாட்டு அமைச்சர்ளையும், சென்னை, டில்லி, சட்டசபை கீழ் மேல்சபை உறுப்பினர்களையும் மற்றும் தமிழ்நாட்டிலுள்ள புலவர்கள், பிரபுக்கள், அரசியல் சமுதாய இயல் கட்சிக்காரர்களையும் வேண்டிக்கொள்கிறேன்.*

*‘தமிழ்’, ‘தமிழ்நாடு’ என்கின்ற பெயர்கூட இந்நாட்டுக்கு, சமுதாயத்திற்கு இருக்க இடமில்லாத நிலைமை ஏற்பட்டுவிடு மானால், பிறகு என்னுடையவோ, என்னுடைய கழகத்தினு டையவோ, என்னைப் பின்பற்றும் நண்பர்களுடையவோ வாழ்வு வேறு எதற்காக இருக்க வேண்டும்?*

***தனி அரசு – 25.10.1955***

# தட்சிணப்பிரதேசம் தற்கொலையானது

**தமிழ்நாடு முதலமைச்சர் திரு.காமராசர் அவர்கட்கு அனுப்பிய அவசரத்தந்திச் செய்தி:**

*‘தட்சிணப்பிரதேசம் ஏற்படுவதென்பது தமிழர்களுக்கு வாழ்வா? சாவா? என்பது போன்ற உயிர்ப்பிரச்சினையாகும். உங்களுக்கும் மற்றெல்லோருக்கும் இது தற்கொலையானதும் ஆகும். தட்சணப்பிரதேசம் ஏற்படுமானால் முன்பின் நடந்திராத கிளர்ச்சி செய்வதற்குத் தமிழ்மக்களை நெருக்குவதாகிவிடும். அருள்கூர்ந்து நம் எல்லோரையும் தமிழ்நாட்டையும் காப்பாற்ற வேண்டுகிறேன்.*

***விடுதலை 01.02.1956***

# திராவிடநாடு எது?

**– பெரியார்**

*திராவிட நாடு எது? இதற்கு முன் 1956 க்கு முன் இருந்த சென்னை மாகாணத்தை நான் 'திராவிட நாடு' என்று சொன்னேன். அப்பொழுது மலையாளம், கன்னடம், ஆந்திரம் பிரிந்திருக்கவில்லை. வெள்ளையன் இந்த நாட்டைவிட்டுப் போய்விட்ட பிறகு வடநாட்டானும், இந்த நாட்டுப்பார்ப்பானும் சேர்ந்துகொண்டு இனிமேல் நமக்கு ஆபத்து என்று கருதி, நான்கு பிரிவுகளாக வெட்டிவிட்டார்கள். இப்பொழுது நம்மோடு ஒட்டிக் கொண்டிருந்த கள்ளிக்கோட்டை, மங்களூர் மாவட்டங்களும் மலையாளம், கன்னட நாடுகளுடன் சேரப் போகின்றன. இப்பொழுது நாம் மலையாளம், கன்னட நாடுகளுடன் சம்பந்தமில்லாமல் தனித்தமிழ்நாடாக ஆகிவிட்டோம்.*

*ஆகவே இதை இப்பொழுது 'தமிழ்நாடு' என்று சொல்லலாம். முன்பு அவர்களையும் சேர்த்துக்கொள்ளலாம் என்று சொன்னோம். ஆனால் அவர்கள் பிரிந்து தனியாகப் போவதிலேயே கவனத்தைச் செலுத்திப் பிரிந்துபோய் விட்டார்கள். நாம் நிபந்தனையற்ற அடிமைகளாய் உள்ளோம்.*

**வெள்ளையர் ஆண்ட காலத்தில் பார்ப்பனரின் அக்கிரமங்களைச் சொல்ல வழிஇருந்தது. அவர்களும் நாம் சொல்வதைக் கேட்டுச் சிலவற்றைக் கவனித்துவந்தார்கள். இப்பொழுது நம்நாடு வடநாட்டிற்கு நிபந்தனையில்லா அடிமைநாடாகி விட்டது.**

*நாங்கள் வெள்ளையரை அப்பொழுதே கேட்டோம்; 'நாங்கள் உங்களை யுத்த காலத்தில் ஆதரித்தோம். பார்ப்பனரும் வடநாட்டினரும் உங்களை எதிர்த்தார்கள்; எங்கள் இனம் வேறு; அவர்கள் 'கலை பழக்கவழக்கங்கள் வேறு' என்று சொன்னோம். அதற்கு வெள்ளைக்காரர்கள், நீங்கள் எல்லோரும் ஒன்றுதான் என்று நினைத்து இருந்தோம். இதெல்லாம் உங்கள் குடும்பச் சண்டை; நாங்கள் சீக்கிரத்தில் இந்த நாட்டைவிட்டு போய்விடப் போகிறோம், என்றுகூறி, முஸ்லீம்களுக்கு சிறு இராஜ்யத்தைப் பிரித்துக்கொடுத்துவிட்டு, நம்மைப் பார்ப்பனருக்கும், வடநாட்டினருக்கும் காட்டிக்கொடுத்துவிட்டுப் போய்விட்டனர். இப்பொழுதும் நாம் வடநாட்டு ஆட்சியில் இருந்து பிரிந்து தனி நாடு ஆகவேண்டுமென்று கூச்சல் போடுகிறோம். தமிழ்நாடு தனியாகப்பிரிந்தால் இருக்குமா? என்று கேட்கிறார்கள். இல்லாமல் காக்கை, கழுகு தூக்கிக்கொண்டா போய்விடும்? பக்கத்தில் இலங்கையும் பர்மாவும் இருக்கும்பொழுது நாம் மட்டும் இருக்கமுடியாதா? நமக்குப் போதுமான வசதி இங்கேயே இருக்கிறது.*

***விடுதலை – 29.08.1956***

# இந்துப் பார்ப்பனியத்தை உயர்த்திப் பிடித்த ம.பொ.சி.

*பெரியாரை எதிர்க்க வேண்டும் என்ற நோக்கத் தோடு சில தமிழ்த் தேசிய அமைப்புகள் ம.பொ.சி. என்று அறியப்பட்ட ம.பொ.சிவஞானத்தை – "தமிழ்த் தேசியத் தலைவராக" உயர்த்திப் பிடிக்கத் தொடங்கியுள்ளனர். உண்மையில் ம.பொ.சி.யின் தமிழ்த் தேசியம், பார்ப்பனியம் சார்ந்தே நின்றதை ஆதாரங்களுடன் விளக்கி, ஏப்ரல் மாத 'சிந்தனையாளன்' இதழில் வெளிவந்த கட்டுரையை இங்கு நன்றியுடன் வெளியிடுகிறோம்.*

'சிலம்புச் செல்வர்' என்று செந்தமிழ்நாட்டு மக்களால் அன்புடன் அழைக்கப்படும் தமிழறிஞர் ம.பொ.சிவஞானம் ஆவார். 'மயிலாப்பூர் பொன்னு சாமி சிவஞானம்' ஆகிய இவர், சுருக்கமாக ம.பொ.சி. என்றே எல்லோராலும் அறியப்பட்டார். அன்னாரின் சிலை திறப்பு விழா கடந்த 9.2.2011 அன்று சென்னை தியாகராயநகர் போக் சாலை சந்திப்பில் சிறப்பாக நடைபெற்றது. தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி ம.பொ.சி. சிலையைத் திறந்து வைத்தார். 13.2.2011 அன்று தலைமைச் செயலகத்தில் ம.பொ.சி. யின் குடும்பத்தினரை அழைத்து நிதி உதவியும் வழங்கினார்.

1906 சூன் 26 இல் சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் பிறந்த ம.பொ.சி.யின் குடும்பம் கொடிய வறுமையில் சிக்கித் தவித்தது. பள்ளியில் மூன்றாம் வகுப்பை அடைந்த ம.பொ.சி. பாடப் புத்தகங்கள் வாங்கவும் காசில்லாமல் மூன்று மாதத்தோடு தன் படிப்பை முடித்துக் கொண்டார். பத்து வயது தொடங்கும் முன்பே பத்து ரூபாய் முன் பணம் கிடைக்கும் என்பதற்காகத் தன் பெற்றோரால் வேலைக்கு அனுப்பப் பட்டார்.

"என்னுடைய வாழ்க்கையில் எனக்கு ஏற்பட்ட பெரிய விபத்து ஒன்று உண்டு என்றால், கல்வி பயில வேண்டிய பருவத்தில் பாட்டாளியாக மாறிய கொடுமையாகும்" என்று அவரே உளம் நொந்து கூறியுள்ளார்.



கட்டடத் தொழிலில் சிற்றாள் வேலை, பீடி சுற்றும் தொழில், நெசவு வேலை எனப் பல இடங்களில் அலைந்த ம.பொ.சி., இறுதியில் அச்சுக் கோக்கும் தொழிலாளி ஆனார். அஃது அவருக்கு வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை தந்தது. அச்சுக் கூடத்தையே கல்விக் கூடமாக மாற்றிக் கொண்டு பற்பல நூல்களை அவர் ஆழமாகக் கற்றுத் தேர்ந்தார். இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்தில் எல்லையற்ற ஈடுபாடு காட்டிச் சிலம்புச் செல்வராய் மிளிர்ந்தார். அவருடைய நாவன்மையும் எழுத்து வன்மையும் எல்லோர் மனங்களையும் கொள்ளைக் கொண்டது.

அவர் இந்திய தேசிய அரசியலில் காந்தியாரின் கருத்துகளால் கவரப்பட்டார். 1927 இல் முறைப்படி காங்கிரசுக் கட்சியில் உறுப்பினரானார். காங்கிரசுக் கட்சி நடத்திய பல்வேறு போராட்டங் களில் பங்கேற்று நாடறிந்த முன்னணித் தலைவர்களில் ஒருவரானார். பலமுறை சிறைப்பட்டார்.

**தமிழரசுக் கழகம்**

காங்கிரசுக் கட்சியில் இருந்துகொண்டே 2.11.1946 அன்று ம.பொ.சி. 'தமிழரசுக் கழகம்' என்ற பொது அரசியல் அமைப்பைத் தோற்றுவித்தார். 'சுதந்தர, சோசலிச, தன்னுரிமைத் தமிழ்க் குடியரசு' என்பதைத் தன் அமைப்பின் அரசியல் கோட் பாடாக அவர் அறிவித்தார். 'தமிழகத்தில் தமிழரசு' என்ற தலைப்பில் அவர் எழுதிய அரசியல் கட்டுரையின் சில பகுதிகள் பின்வருமாறு:

*"புதிய தமிழகத்தின் பொருளாதாரக் கொள்கை பொது வுடைமையே யன்றித் தனிவுடைமை அன்று, இந்தப் பொதுவுடைமை இலட்சியமானது தமிழர் பண்பாட்டின்படியும், தற்கால விஞ்ஞான ரீதியாக வகுக்கப்பட்ட முறைகளின்படியும் நிறைவேற்றப்படும்.*

*மத விஷயங்களில் அரசாங்கம் பூரண நடுநிலை வகிக்கும். மனிதனுக்கு மனிதன் உயர்வு தாழ்வு கற்பிக் கும் பழக்க வழக்கங்கள் சட்டப்படி தடுக்கப்படும்...*

*மேற்சொன்ன வகையில் ஒரு புதிய தமிழகத்தைச் சிருஷ்டிக்கத் தமிழரசு ஒன்றினால் தான் முடியும். அத்தகைய அரசு வேண்டுமென்று முரசு கொட்டு வோம்!"*

*(தமிழ்முரசு, மே 1946)*

பொதுவுடைமை இலட்சியம், தமிழர் பண்பாடு, மனித ரிடையே உயர்வு தாழ்வு கற்பிக்கும் தத்துவங்களுக்குத் தடை, மத விஷயங்களில் நடுநிலை என்றெல் லாம் ம.பொ.சி. பேசினாலும் இத்தனைக் கொள்கைகளுக்கும் எதிராக இருந்த இராச கோபாலாச்சாரியுடன்தான் அவர் அரசியல் நடத்தினார். அவரைத் தான் தன்னுடைய ஞான குருவாக ஏற்றுக் கொண் டார். தன்னைப் போல் எளிய குடும்ப நிலையும் சமூகப் பின்னணியும் கொண்ட காமராசருக்கு எதிராகவே எப்போதும் களத்தில் நின்றார்.

தமிழ்க் கலாச்சாரம், தமிழர் பண்பாடு என்று ம.பொ.சி.யால் உயர்த்திப் பிடிக்கப்பட்ட எல்லா வற்றையும் குழி தோண்டிப் புதைக்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டவர் குல்லுகப் பட்டர் இராசகோபாலாச்சாரி ஆவார். தான் வாழ்ந்த ஒவ்வொரு நொடியையும் பார்ப்பனிய மேலாதிக்கத் தின் நலனுக்காயும், தமிழினத்தின் அழிப்பிற்காயும் செலவிட்ட தன்னிகரற்ற ஆரியப் பார்ப்பனர் அவர்!

அதனால்தான் தந்தை பெரியார் 'ஆச்சாரியார் தான் பிடித்த முயலுக்கு நான்கு கால் என்றால், மூன்று கால் என்று சொல்லுங்கள். அவர் வடக்கே நடக்கச் சொன்னால் நீங்கள் தெற்கே செல்லுங்கள்' என்று தமிழர்களுக்கு அறிவுறுத்தினார்.

**குலக் கல்வித் திட்டத்திற்கு ஆதரவு**

இராசாசியின் வஞ்சக மூளையில் வடிவெடுத்த கொடிய திட்டந்தான் 'குலக் கல்வித் திட்டம்' என்பது. 'பாதி நேரம் படிப்பு. மீதி நேரம் அப்பன் குலத் தொழில்' என்னும் பச்சையான மனுதரும நெறிக்குப் பாதைப் போட்ட ஆச்சாரியாரின் இந்தக் கொடிய கல்வித் திட்டத்தை எதிர்த்துத் தமிழ்நாடே கொந்தளித்து எழுந்தது. வஞ்சகப் பார்ப்பன ஆட்சியை ஒழிக்காமல் தமிழர்க்கு வாழ்வில்லை என்று முடிவோடு வரிப்புலியாய்ச் சீறிப் பாய்ந்தார் பெரியார்.

குலக்கல்வித் திட்டத்திற்கு எதிராக தமிழ்நாடே கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தபோது, அந்தக் கல்வித் திட்டத்தை ஆதரித்து ம.பொ.சி.யின் தமிழரசுக் கழகம் தீர்மானம் நிறைவேற்றியது. ஆச்சாரியாரின் நிலையை அரணிட்டுக் காக்க நாடெங்கும் ஊர்வலங்கள், மாநாடுகள், பொதுக் கூட்டங்கள் நடத்த முடிவு செய்தது. தி.க., தி.மு.க. மட்டுமல்ல காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த காம ராசரும் குலக் கல்வித் திட்டத்தைக் கண்டித்தார். ம.பொ.சி. அந்தக் காமராசரைக்கூட விட்டு வைக்கவில்லை.



*"புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்துப் பேசினார் காமராசர். கல்வித் திட்டம் சரியா, தவறா என்பதில் அவருக்குக் கவலை யில்லை. இராசாசி ஆட்சியை வெளியேற்றித் தான் அதிகாரத்திற்கு வர அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார்." (ம.பொ.சி. 'எனது போராட்டம்'. பகுதி 2: பக்கம் 392)*

ஆனாலும், அலைகடலெனத் தோன்றிய மக்களின் எதிர்ப்பை எதிர்கொள்ள முடியாமல் இராசாசி ஆட்சியை விட்டு ஓடினார். அவரின் கேடான குலக்கல்வித் திட்டம் சவக்குழிக்குப் போனது. தமிழகத்தில் கல்வி மறுமலர்ச்சிக்குக் கால்கோளிட்ட காமராசரின் ஆட்சி மலர்ந்தது.

**திராவிட இயக்க எதிர்ப்பு**

வருணாசிரம தருமத்தை வேரோடு கிள்ளி எறிதல், சாதி ஏற்றத் தாழ்வுகளைத் தரைமட்ட மாக்குதல், மானுட சமத்துவம் பேணுதல் உள்ளிட்ட உயரிய குறிக்கோள்களுடன் உருவானதே திராவிட இயக்க மாகும். ஆனால் 'தமிழரசுக் கழகம்' என்ற பெயரில் இயக்கங்கண்ட ம.பொ.சி. பார்ப்பனியத் திற்குப் பாலூட்டுதல், பழமைக்கும் மூட நம்பிக்கை க்கும் பட்டுக் கம்பளமும் விரித்தல், ஆரியத்திற்கு அடிமைத் தொண்டு புரிதல் போன்ற வீடண ஆழ்வார் வேலைகளை ஆரவாரத்தோடு மேற்கொண்டார்.

*"ம.பொ.சி. 1951 இல் திராவிட இயக்கப் பிரச் சாரத்தை எதிர்த்து மாநாடு நடத்தினார். 'திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடு' எனும் பெயரில் 1951 மார்ச்சு முதல் 1951 நவம்பர் வரையில் மாநாடுகளை நடத்தினார். இந்த மாநாடுகள் தமிழரசுக் கழகம், காங்கிரசு பெயரால் நடத்தப்படாமல் 'திராவிட இயக்க எதிர்ப்பு முன்னணி' சார்பாக நடத்தப்பட்டன.*

*பகுத்தறிவுவாதம், மூடநம்பிக்கைகளை ஒழித்தல், இனவுணர்ச்சி என்ற பெயரால் தமிழகம் மரபு, பண்பாடு, ஆன்மிகம் ஆகியவற்றில் இருந்து திசை தவறிச் செல்லாமல் கட்டிக் காத்தன திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடுகள்". (நூல் : இந்திய இலக்கியச் சிற்பிகள்; ம.பொ.சிவஞானம் - பெ.சு.மணி, பக்.14)*

தமிழரசுக் கழகத்தின் கொள்கைகளில் ஒன்றாக 'மத விஷயங்களில் அரசாங்கம் பூரண நடுநிலை வகிக்கும்' என்பது குறிப்பிடப்பட்டிருந் தாலும் ம.பொ.சி. தன் வாழ்நாள் முழுவதும் இந்துத்துவக் கருத்தியலையே பற்றி நின்றார்.

சங்ககால இலக்கிய மரபுகள், பெரும்பாலும் ஆரியக் கருத்தியல்கள் அதிகம் சாராத தனித் தன்மை கொண்டவை. எனினும் வேத மதக் கலப்பும் ஒரு குலத்துக்கு ஒரு நீதி என்னும் வருணக் கலப்பும் தாம் தொல் தமிழ் மக்களின் இயற்கை சார்ந்த பண்பாட்டுக் கூறுகளைத் தகர்த்தன. இக் கோட்பாட்டை ம.பொ.சி. ஏற்க மறுத்தார்.

தமிழ், சைவம், வைணவம், வைதீகம், இராமாயணம், பெரிய புராணம், நாயன்மார்கள், ஆழ்வார்கள், தெய்வீகம் இறை நம்பிக்கை என்பவற்றையெல்லாம் ஒன்றாகக் கலந்து, ம.பொ.சி. மூடநம்பிக்கை களுக்கு முட்டுக் கொடுக்கும் திருப்பணியைச் சிறப்பாகவே செய்தார்.

"தமிழருக்கே உரிய சங்க காலத்து இலக்கிய மரபுகளும் வாழ்க்கை நெறிகளும், ஆரிய மொழியும் மரபும் தமிழில் கலந்த சமய சகாப்தத்திலே திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டனவென்பது தவறாகும்.

தமிழ்ப் பற்றும், தமிழினப் பற்றும் சமய சகாப் தத்திலே புறக்கணிக்கப்பட்டு மூடநம்பிக்கைகள் நிரம்பிய சமயவாதமே தமிழர் மீது ஆதிக்கம் செலுத்தியது என்பது இலக்கிய ஆய்வாளர்கள் சிலருடைய தவறான வாதம். இதுவும் தவறு.

இனக்கலப்பும் மதக்கலப்பும் ஏற்பட்ட சமய சகாப்தத்திலே தமிழருடைய பண்பாடு அழிந் தொழிந்துவிட்டது என்று இலக்கிய ஆய்வாளர் களிலேயும் சிலர் கருதுகின்றனர். இது முற்றிலும் தவறு." (மேற்படி நூல், பக்.107)

(அதாவது தமிழ்ப் பண்பாட்டில் பார்ப்பனர் பண்பாடு ஊடுருவியதால் எந்த பாதிப்பும் இல்லை என்கிறார். - ஆர்)

3.3.1976 இல் சென்னையில் உள்ள சங்கர மடத்தில் மறைந்த 'பெரிய பெரியவாள்' சந்திரசேகர சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற இந்து மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய ம.பொ.சி. தன்னை ஒரு தமிழனாக எண்ணுவதைவிட இந்துவாக எண்ணுவதில் அதிகப் பெருமிதங் கொண்டார்.

"நான் தமிழன் என்னும் இனவுணர்வுடையவன். தமிழ்ப் பேசும் எல்லா மக்களுக்கும் இந்த உணர்வு வேண்டுமென்றும் எண்ணுபவன். ஆயினும், தமிழன் என்ற வகையிலே எனக்கு இந்த உலகிலுள்ள உறவினர்கள் சுமார் நாலரைக் கோடிப் பேர்தான்... நாம் இந்துவாக இருப்பதால் ஐம்பது கோடிக்கு மேற்பட்ட மக்களோடு உறவு கொள்ள முடிகிறது. என்னைப் பொருத்த வரையில் இந்த உறவுக்காகத் தான் நான் இந்துவாக இருக்கிறேன். இனியும் அப்படியே இருக்க விரும்புகிறேன்." (ம.பொ.சி. ஆன்மீகமும் அரசியலும், பக்.73)

அப்படியானால் உலகில் அதிக மக்கள் எண்ணிக்கை கொண்ட மதம் புத்த மதந்தான். ம.பொ.சி. புத்த மதத்தில் சேர்ந்திருந்தால் இன்னும் கோடிக்கணக்கான மக்களோடு உறவு கொண் டிருக்க முடியுமே! ஆனால் இந்துத்துவ மாயைக்கு ஆட்பட்டுவிட்ட ம.பொ.சி.க்கு அப்படிச் செய்ய முடியாது.

"வேதா கமங்களென்று வீண்வாத மாடுகின்றீர்
வேதா கமத்தின் விளைவறியீர் – சூதாகச்
சொன்னதலால் உண்மைவெளி தோன்ற உரைத்தலிலை
என்ன பயனோ இவை?"

என்று பார்ப்பனியத்தை நத்தி வாழ்ந்த பழமைக் குருட்டு நம்பிக்கையாளர்களைப் பார்த்து வேதனை யோடு பாடினார் வடலூர் இராமலிங்க வள்ளல்.

**பார்ப்பன ஆச்சாரியாரின் 'கைத்தடி'யே ம.பொ.சி.**

இந்தியத் துணைக் கண்டத்தில் பல்வேறு மொழி - இன மக்கள் வாழ்கிறார்கள். அவர்களின் மத நம்பிக்கையும் தனித் தனி. ஒவ்வொருவரும் அவரவர் சார்ந்த மத நம்பிக்கைகளோடு வாழ முழு உரிமையுடையோர் ஆவர். ஆனால் இங்குள்ள இந்து மத வெறியர்கள் இந்தியா இந்துக்களுக்கு மட்டுமே உரிய நாடு என்று ஓலமிடுகிறார்கள். இந்திய ஒருமைப்பாடு காக்கப்பட இந்து மதமும் காக்கப்பட வேண்டும் என்று உரத்தக் குரல் எழுப்புகிறார்கள். அருமைத் தலைவர் ம.பொ.சி. அத்வானியின் குரலாகப் பின்காணுமாறு முழங்குகிறார்:

'என் இந்திய நாட்டு மதம் – இந்து மதம் அழியக் கூடாது. அழிப்பாருண்டானால், உயிர் கொடுத்தும் காக்க வேண்டும் என்ற ஆர்வம் உங்களைப் போலவே எனக்கும் உண்டு. இந்தியாவின் தேசிய ஒருமைப் பாட்டிற்கு இந்து மதம் பெருமளவுக்குப் பயன்பட்டு வந்திருக்கின்றது. ஆகவே இந்து மதம் அழியுமானால், இந்தியாவின் ஒருமைப்பாடு நலிந்து போகும் என்று நம்புபவர்களில் நான் ஒருவன்'. (இந்திய இலக்கியச் சிற்பிகள், ம.பொ.சிவஞானம் – பெ.சு.மணி. பக்.113)

ம.பொ.சி.யின் இந்துமதப் பற்று சில நேரங்களில் தமிழைத் தாழ்த்தியும், ஆரிய மொழியான சமற்கிருதத்தை உயர்த்தியும் பேசுவதைக் காணும் போது அதிர்ச்சியாக உள்ளது.

- *"ஆலயங்களில் அருச்சனை தமிழில் நடைபெற வேண்டுமென்ற கோரிக்கை நமக்கு உடன்பாடே. ஆனால் இங்கு ஒன்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இது முற்றிலும் சமயத் தொடர்புடைய பிரச்சினை. இந்தப் பிரச்சினையில் வடமொழிக் காழ்ப்புக்கு (வெறுப்புக்கு) இரையாகக் கூடாது.*
- *சமற்கிருதம் இந்துக்களின் பொது மொழியாக இருப்பதன் காரணமாக, இம் மொழியில் அருச்சனையை விரும்புவோர்க்கும் தடை சொல்லத் தேவையில்லை. இது இந்து மதத்தவரின் ஒருமைப்பாட்டுக்கும் உதவி புரியும்." (ம.பொ.சி.யின் நூல்: தமிழும் சமற்கிருதமும்)*

வழிபாட்டு மொழியாக மட்டுமல்லாமல், சமற் கிருதத்தைப் பிழையறக் கற்ற புரோகிதரைக் கொண்டு தமிழர்கள் தங்கள் வீட்டுத் திருமணங்களைப் பார்ப்பனரை வைத்தும் நடத்திக் கொள்ளலாம் என்பதுதான் ம.பொ.சி.யின் உள்ளக் கிடக்கையாகும்.

**வல்லாண்மை கொண்ட மொழியாக இங்கே இந்தி திணிக்கப் பட்டபோது தமிழகமே கொதித்தெழுந்து போர்க்கோலம் பூண்டது. தம் தள்ளாத வயதிலும் தார் சட்டியைத் தூக்கிக் கொண்டு தந்தை பெரியார் இந்தி எழுத்துகளை அழித்தார். அப்படி அவர் இந்தியை அழித்துச் சென்ற இடங்களுக்கெல்லாம் ம.பொ.சி. சென்று மறுபடியும் இந்தி எழுத்துக்கள் அங்கே தோன்றச் செய்தார். (தார் மீது மண்ணெண்ணெய் ஊற்றி தாரை அழித்தார்)**

இந்திக்கும், வடமொழிக்கும் ஆதரவாக ம.பொ.சி. எடுத்த நிலைப்பாடுகள் அவரின் இந்திய - இந்துத்துவ பற்றுக் காரணமாய் வெளிப்பட்டவை. என்றாலும் 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்கிற அரசியல் முழக்கத்தை அவர் தம் வாழ்வின் இறுதிக் காலம் வரை விடாமல் தூக்கிப் பிடித்தார். 'ஆங்கிலம் வளர்த்த மூடநம்பிக்கை' என்கிற அவரின் அருமையான நூலில் தாய்மொழியின் மேன்மை குறித்த மேலான கருத்துகள் மிக சிறப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.



ஆங்கில மோகத்தால் கொண்ட அடிமைப் புத்தியில் இங்குள்ள திராவிடக் கட்சிகள் பல இந்தித் திணிப்பை முன்நிறுத்தித் தமிழ் மொழி வளர்ச்சிக்குக் கேடு செய்ததை, ம.பொ.சி. அச்சமின்றி இடித்துரைத்தார்.

- *பதினைந்தாண்டு காலக்கட்டத்திற்குள் ஆங்கிலத் தின் இடத்தை இந்தி அடையாதபடி தமிழராகிய நாம் தடை போட்டோம் என்பது உண்மைதான். ஆனால், நமது தடையையும் தகர்த்துக் கொண்டு இந்தி மொழி ஆங்கிலத்தின் இடத்தைப் பிடிப் பதிலே முன்னேறிக் கொண்டுதான் இருக்கிறது. (ஆங்கிலம் வளர்த்த மூடநம்பிக்கை, பக்.27)*
- *உண்மை என்னவென்றால், தமிழக அளவில் ஆட்சி மொழியாக - பல்கலைக்கழகங்களில் பாட மொழியாக - நீதிமன்றங்களில் நிர்வாக மொழியாக இனியும் ஆங்கிலமே நீடிக்குமானால் எதிர்காலத்தில் ஆங்கிலத்தை விரட்டி இந்தி மொழி அந்த இடங்களில் அழுத்தமாக அமர்ந்து விடுவது சாத்தியமாகும். அதற்காகவேனும் உடனடியாகத் தமிழக அளவில் அரசு அலுவலகங்களில் ஆங்கிலத்திற்கு பதில் தமிழை அமர்த்தியாக வேண்டும். (மேற்படி நூல், பக்.29)*
- *ஆங்கில மொழியானது உலகத்தைப் பார்க்கும் சாளரமாக இருப்பதைக்கூட நான் வரவேற்பேன். உலகம் என்பது ஒரு திசை மட்டுந்தானா? எட்டுத் திசையையும் நான் பார்க்க வேண்டுமானால் ஆங்கில மொழிச் சாளரம் ஒன்று மட்டும் போதுமா? ஒரு வீட்டுக்கு ஒரே சன்னல் இருப்பது வழக்கமில்லையே!*

இப்படியாய் மூன்றாம் வகுப்பைக்கூட மூன்று மாதம் மட்டுமே படித்த ம.பொ.சி. ஒரு மாபெரும் அறிஞராகத் தாய்மொழியின் தேவைபற்றிச் சிந்தித்திருப்பது வியப்பைத் தருகிறது. திராவிட இயக்கத் தலைவர்கள் பெரும்பாலோர் 'இந்தி எப்போதும் இல்லை; ஆங்கிலம் எப்போதும்!' என்கிற சிந்தனைக்கு ஆட் பட்டுப் போனது தமிழர்க்கு தேர்ந்த பெருங்கேடே ஆகும்.

*(ஆங்கில எதிர்ப்புப் பற்றிய கட்டுரையில் மேலே கூறப்பட்டுள்ள கருத்துகள் – கட்டுரை யாளரின் கருத்துகளே. – ஆர்)*

## வடவெல்லைப் போராட்டம்

தமிழகத்தின் வடவெலலைப் பகுதியில் அமைந்த திருத்தணி உள்ளிட்ட ஊர்களைத் தமிழ்நாட்டோடு இணைத்ததில் ம.பொ.சி. ஆற்றிய பங்கு ஈடிணை யற்றதாகும். தமிழறிஞர் மங்கலங்கிழாரும் விநாயகம் உள்ளிட்ட மற்றவர்களும் இப்போராட்டத்தில் ம.பொ.சி.யுடன் இணைந்து மக்கள் திரள் போராட்டங்கள் பல நடத்தி வெற்றி கண்டனர். தெலுங்கர்களின் ஆதிக்கத்திற்கு ஆட்பட்டுத் தமிழகத்தின் தலைநகரமான சென்னை, தப்பிச் செல்லாமல் காத்ததிலும் ம.பொ.சி.யின் பங்கு மாட்சிமை மிக்கது.

தென் தமிழ்நாட்டில் கேரளத்திற்கு இரையானது போக எஞ்சியிருந்த சில பகுதிகளை மீட்டுத் தமிழ்நாட்டோடு இணைத்ததில் நேசமணி உள்ளிட்ட பெருமக்களுக்குப் பெரும் பங்கு உண்டு. இதில் ம.பொ.சி.யின் பங்கு அளவானதே!

இன்றுள்ள எல்லாக் கேடுபாடுகளுக்கும் பெருமளவில் காரணமாய் இருப்பது இந்திய தேசியம் தான். இந்தியத் தேசியம் என்பது இந்தப் பாசிச - பார்ப்பனிய பயங்கரவாதத்தின் மீது கால்கொண்டு நிற்கிறது. இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள தேசிய இனங்கள் யாவும் தமக்குள் முரண்பட்டு முட்டி மோதிக் கொள்வது தில்லியி லுள்ள ஓநாய்களுக்குத் தித்திப்பான செய்திதான்.

இந்தியா ஓர் ஒற்றைத் தேசமல்ல என்று ஓங்கிக் குரல் கொடுத்தவர் பெரியார். ஒடுக்குண்ட உழைப்புச் சாதி மக்களின் உரிமைகளுக்காக வாழ்நாள் முழு வதும் போராடியவர் பெரியார். மானிட இனத்தையே சாதியின் பேரால் வெட்டிக் கூறுபோட்ட மாபெரும் கொடுமையை எதிர்த்துச் சமரசமின்றி போர்த் தொடுத்த தன்மான வேங்கையவர். வரலாறு நெடுகிலும் பார்ப்பன பயங்கரவாதம் நிகழ்த்திய படுகொலைகள் எண்ணற்றவை. சூத்திரச் சாதி மக்களின் (சூத்திரச் சாதி என்பது தாழ்த்தப்பட்டோரையும் உள்ளடக்கியதே) துயர்நீக்கிப் பாடுபடுவதையே தன் இறுதி இலக்காகக் கொண்டு பெரியார் செயல்பட்டார். இந்தப் பணியில் ஆரியக் கொடும் பார்ப்பனர்களில் அளவிறந்த கொடுமை களை அவர் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பெரியாரின் 'தமிழ்நாட்டு விடுதலை' என்பதைப் பார்ப்பனியம் ஒழித்த ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை என்றே கொள்ளலாம்.



அரசியல் களத்தில் பெரியாரின் பார்ப்பன - பனியா ஒழிப்புச் செயற்பாடுகளுக்கு இராசாசி மிகப் பெரும் அறைகூவலாய் நின்றார். தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு என்று பேசிய ம.பொ.சி. காலமெல்லாம் இராசாசியின் மெய் காவலர் போல் பின்தொடர்ந்தார். பெரியாரின் ஆரியப் பார்ப்பன இந்துத்துவா எதிர்ப்புப் போராட்டங்களுக்கு மறுப்புக் குரல் எழுப்ப மனுவின் மைந்தர்கள் ம.பொ.சி.யைக் கறிவேப்பிலைக் கொத்தைப் போல் பயன்படுத்திக் கொண்டார்கள்.

ம.பொ.சி. தனது வாழ்க்கை வரலாற்று நூலில் இராசாசியின் அடியாளாக இருந்ததைப் பற்றிப் பெருமையோடு பின்வருமாறு எழுதுகிறார்.

"என் தலைமையை எதிர்ப்பவர்கள் என்னைவிட அதிகமாகக் கிராமணியாரையே தாக்குகிறார்கள். அதற்குக் காரணமுண்டு. கிராமணியார் வீர அபிமன்யு போன்றவர். என்னால் உடைக்க முடியாத எதிரிகளின் வியூகத்தை உடைத்து அவர் என்னை உள்ளே அழைத்துச் செல்கிறார். அதனால் என்னை எதிர்ப் பவர்கள் அவர் மீது அதிகம் ஆத்திரப்படுகிறார்கள்". (ம.பொ.சி. எனது போராட்டம், பகுதி 1, பக்கம் 382)

திராவிடக் கட்சிகளை எதிர்த்து அரசியல் நடத்திய ம.பொ.சி. திராவிடக் கட்சிகள் ஆண்ட போதுதான் பதவிகள் பெற்றார். அண்ணா காலத்தில் 'உதயசூரியன்' சின்னத்திலேயே வெற்றிப் பெற்று சட்டமன்ற உறுப்பினர் ஆனார். 'சென்னை மாநிலம்' 'தமிழ்நாடு' எனப் பெயர் மாற்றம் பெற்ற விழா நாளில், அந்த விழாவிற்குத் தலைமை தாங்கும் தகுதியையும் பெருமையையும் அண்ணா ம.பொ. சி.க்கு வழங்கினார். கலைஞர் காலத்தில் மேலவைத் துணைத் தலைவராயும் எம்.ஜி.ஆர். காலத்தில் அதன் தலைவராயும் ம.பொ.சி. விளங்கினார்.

ஈழ மக்களின் துயர்களைப் பற்றி தனியே நூல் எழுதிய ம.பொ.சி. இராசிவ் காந்தி அனுப்பி வைத்த அமைதிப் படையின் செயல்களை ஆதரித்துக் கூட்டங்களில் பேசினார். இறுதியில் தன் அரசியல் வாழ்வை மீண்டும் காங்கிரசில் சேர்ந்து கரைத்துக் கொண்டார்.

"தமிழரசுக் கழகம் எந்தெந்தக் கொள்கை களுக்காகத் தோன்றியதோ, அவை ஆட்சிக்குப் போகாமலே காங்கிரசுக் கட்சியைப் பயன்படுத்தி நிறைவேற்றி விட்டதால், காந்தியடிகள்

போதனைப் படி அது தேவைப்படவில்லை. காங்கிரசோடு கலந்துவிட்டது" என்று சொல்லித் தன் கட்சியையும் காங்கிரசில் கரைத்து விட்டார்.

ம.பொ.சி.யின் புகழுக்கு மாவிளக்கு ஏற்ற நாட்டில் சில நவீன சீடர்கள் புறப்பட்டிருக்கிறார்கள். சிலம்புச் செல்வரின் வரலாற்றுப் பங்களிப்பை யாரும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. ஆனால் அவரின் புகழ் பாடும் அதே நேரத்தில் பெரியாரைக் குப்புறக் கவிழ்த்து முதுகில் குத்தும் வேலையையும் செய்கிறார்கள்.

1938 இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது 'தமிழ்நாடு தமிழர்க்கே' என்று முதன்முதலில் குரலெழுப்பியவர் தந்தை பெரியார் தான்.

சாவு தன்னை ஆரத்தழுவ வரும் இறுதிக் காலத்திலும் பெரியார் நிகழ்த்திய இறுதிப் பேருரையில் (19.12.1973) தமிழ்நாடு தனியே பிரிய வேண்டும் என்றே முழங்கினார்.

ஆனால் தமிழகத்தைச் சுதந்திர நாடாக்க வேண் டும் என்ற நோக்கோடு 1946 இல் தமிழரசுக் கழகம் கண்ட ம.பொ.சி. தன் வாழ்வின் இறுதிக் கட்டத்தில் மீண்டும் காங்கிரசில் போய்க் கரைந்தார். காலங்கள் மாற லாம். கடந்த கால வரலாறு கூடவா மாறிப் போகும்?

– புரட்சிப்பெரியார்முழக்கம் : 19.05.2011, 26.05.2011



# குமரி மாவட்ட மீட்புப் போராட்டத்தில் பெரியாரின் பங்கு

**கன்னியாகுமரி தமிழகத்தோடுதான் இணைக்கப் பட வேண்டும் என்று தளபதி நேசமணி தலைமையில் நடந்த போராட்டத்தில் பெரியாரின் பங்கு இருட்டடிக்கப்படுகிறது. பெரியார் மீது அவதூறுகளை வீசவும் ஒரு கூட்டம் காத்திருக்கிறது.**

குமரி மாவட்ட மீட்புப் போராட்டத் தளபதி நேசமணி பற்றி - 'நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம்' என்ற நூலை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல் ரசாக் எழுதியுள்ளார். அந்நூலுக்கு சட்டமன்ற உறுப்பினராக இருந்த ஏ.சுவாமிதாஸ் எழுதிய அணிந்துரையை இங்கு வெளியிடுகிறோம். அடக்கு முறைகளைக் கண்டு அஞ்சி, ம.பொ.சி., அரசுக்கு பயந்து சொற்பொழிவு ஆற்றாமலே ஓட்டம் பிடித்தார் என்ற உண்மை யையும், பெரியார் மலையாளிகளுக்கு கடும் எச்சரிக்கை விடுத்துப் பேசியதையும் இந்த அணிந்துரையில் சட்டமன்ற உறுப்பினராக இருந்த ஏ.சாமிதாஸ் பதிவு செய்துள்ளார். அவர் எழுதிய அணிந்துரை:

"'பெரியவர்' என்றும், 'வக்கீல்' என்றும், 'மார்ஷல்' என்றும் 'குமரித் தந்தை' என்றும் அழைக்கப் பெறும் சிறப்புக்கு உரியவர் திரு.ஏ. நேச மணி. அவர் திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசை உருவாக்கிப் போராடும்போது நான் கல்லூரியில் பயின்று கொண்டிருந்தேன். கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் போதே திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசில் செயற்குழு உறுப்பினராகவும் பிரச்சாரக் குழு உறுப்பினராகவும் இருந்தேன்.

கண்ணில் கண்டவர்களை, 'கண்டால் அறியாம் பள்ளி' என்று கூறிக் கைது செய்தனர். நான் போலீசுக்குப் பிடி கொடுக்காமல் வாழ்ந்தேன். திருவிதாங்கூரில் நடந்த தமிழகப் போராட்டத்தில் போலீஸ் அத்துமீறிச் செயல்பட்டது. பலரைத் துப்பாக்கிக்கு இரையாக்கியும் பலரைச் சித்திரவதை செய்தும் பலரைத் துன்புறுத்தியும் கைது செய்தனர். **தமிழ்க் கூட்டங்களில்**

**சொற்பொழிவு ஆற்ற வந்த ம.பொ.சி. சொற்பொழிவு ஆற்றாம லேயே அரசுக்குப் பயந்து திரும்பிச் சென்றார்.**

**ஆனால், பெரியார் ஈ.வெ.ரா. மட்டும் திருவிதாங்கூர் தமிழ் மக்கள் நிலைமையை மார்ஷல் நேசமணியிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார். இதன் பின்னணியாகச் சென்னை மெரினா கடற் கரையில் ஒரு கூட்டத்தைப் போட்டு, "திருவிதாங்கூரில் போலீஸ் அடக்கு முறையை உடனடியாக நிறுத்தா விட்டால், தமிழகத்தில் வாழும் மலையாளிகளை நாங்கள் இங்கிருந்து அடித்துத் துரத்துவோம்" என்று பொதுக் கூட்டத்தில் அறிக்கை விட்டார். மலையாள அரசு தமிழனைத் துன்புறுத்தியதை நிறுத்தியது.**

**மார்ஷல் நேசமணி தன் கையால் மாலை அணி வித்த ஒரே தலைவர் பெரியார் தான்.** பெரியாரும் மார்ஷல் நேசமணி மீது மிக்க மதிப்பு வைத்திருந்தார். திருவிதாங்கூர் தமிழர் போராட்டத்தில் மார்ஷல் நேசமணிக்குப் பொருளுதவி செய்தவர் பயோனியர் குமாரசுவாமி. டாக்டர் மத்தியாஸ், கட்டுக்கடை தேவசகாயம் ஆசான் ஆகியோர் மருத்துவ உதவி செய்தனர்.

திரு. கோலப்பா பிள்ளை நாஞ்சில் நாடு வங்கி நிறுவனர். இவருடைய நெருங்கிய நண்பர். குமரித் தந்தை வழி நாம் போராடி தமிழ் நாட்டுடன் இணைந்தோம். அந்தப் போராட்டத்தைப் பற்றி அவருடன் இணைந்து போராடிய ஜனாப் அப்துல் ரசாக் முன்னாள் எம்.பி. எழுதிய 'நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம்' என்ற நூல் வெளி வருவதை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன். அதனைப் பல்வகை சிரமத்தின் மத்தியில் பதிப்பித்து வெளியிடும் பேராசிரியர் டாக்டர் மு. ஆல்பென்ஸ் நதானியேல் அவர்களின் பணி சிறக்க வாழ்த்துகிறேன். இந்நூல் நறுமணம் மிக்கதாக அமைய எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

*- ஏ. சுவாமிதாஸ், பி.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ., நுள்ளிவிளை, 15.08.1998.*

*1998 நவம்பர் மாதம் நாகர்கோயில் பயோனியர் குமாரசாமிக் கல்லூரி பேராசிரியர் முனைவர் மு.ஆல்பென்ஸ் நதானியேல், தமது 'தமிழ்க்குடில்' பதிப்பகத்தின் சார்பில் இந்த நூலை வெளியிட் டுள்ளார்.*

*புரட்சிப்பெரியார்முழக்கம் : 17.11.2011*



# ஆச்சாரியாரின் குலக் கல்வித் திட்டத்தை ஆதரித்த ம.பொ.சி.!

- காங்கிரசுக்குள்ளேயே இருந்து கொண்டு 1946 ஆம் ஆண்டு 'தமிழரசுக் கழகம்' என்ற அமைப்பை உருவாக்கிய ம.பொ.சி., முதலில் 'சுதந்திர தமிழரசு' அமைப்பதே இதன் லட்சியம் என்று அறிவித்தார். பிறகு 1953 இல் வெளியார் சுரண்டல் இல்லாத தமிழகம் அமைந்தாலே போதும் என்று தனது கொள்கையை சுருக்கிக் கொண்டார்.
- மாநிலங்களை சுதந்திரமான உறுப்பு நாடுகளாக பிரிட்டிஷ் அரசே அங்கீகரித்ததால் தான், 'சுதந்திரத் தமிழகம்' என்ற கோரிக்கையை தாம் முன் வைத்ததாகவும், இந்தியாவிலிருந்து, தமிழகம் தனியே பிரிந்து நிற்கிறது என்று பொருளில் கூறவில்லை என்றும் பிறகு சுய விளக்கம் அளித்தார்.
- 'இந்து' பார்ப்பன நாளேட்டுக்கு ம.பொ.சி. எழுதிய ஒரு கடிதத்தில் ,"என் ஆயுளில், இது வரை சுதந்திர தமிழ்க் குடியரசு தேவை என்று பேசியதே இல்லை; (தனிநாடு கேட்கும்) இந்த மாதிரியான பிளவு முயற்சிகளை எதிர்ப்பதற் காகவே தமிழரசு கழகம் தொடங்கப்பட்டது" என்று, தான் தனிநாடு கேட்பதாக 'இந்து' வெளியிட்ட செய்தியை மறுத்தார். இதை குத்தூசி குருசாமி கிண்டலடித்து 'விடுதலை'யில் எழுதினார்.
- ம.பொ.சி. - ராஜகோபாலாச்சாரி பார்ப்பனரின் 'கைத்தடி'யாக செயல்பட்டு காமராசரை கடுமையாக எதிர்த்தவர். காமராசர் எதிர்ப்புக்கு ராஜகோபாலாச்சாரி - ம.பொ.சி.யை பயன் படுத்திக் கொண்டார். இதை ராஜகோபாலாச் சாரியாரே மதுரை கூட்டம் ஒன்றில் பேசும்போது கூறினார்:

"என் தலைமையை எதிர்ப்பவர்கள் என்னைவிட அதிகமாக (ம.பொ.சிவஞானம்) கிராமணி யாரையே தாக்குகிறார்கள். அதற்குக் காரணம் உண்டு. கிராமணியார் 'வீர அபிமன்யு' போன்றவர். என்னால் உடைக்க முடியாத எதிரிகளின் வியூ கத்தை உடைத்து அவர் என்னை உள்ளே அழைத் துச் செல்கிறார்" - என்று பேசினார். (ஆதாரம்: ம.பொ.சி. எழுதிய 'எனது போராட்டம்' நூல்)

- பார்ப்பனியத்தையும் இந்திய தேசியத்தையும் தமிழினத்தின் முதன்மையான பகைவர்களாக முன் வைத்துப் பெரியார் போராடினார். ஆனால், ம.பொ.சி. முதலில் 'தனியரசு' பேசி, பிறகு இந்திய தேசியத்துக்கு உள்ளிட்ட தமிழ்த் தேசியம் என்ற நிலைக்கு வந்து, அதன் பிறகு இந்திய ஒற்றுமைக்கு பங்கம் வராத மாகாண சுயாட்சி' என்று கூறி, பிறகு மொழி வழி தேசியத்தையும் கைவிட்டு பெரியார் கொள்கைக்கு நேர் எதிரான மதவழி தேசியத்தை தூக்கிப் பிடித்தார்.
- "தேசிய ஒருமைப்பாட்டைக் கருதியேனும் 'இந்து'க்கள், குறிப்பாகத் தமிழகத்தார் இந்து மதத்தை உறுதியாகக் கடைப்பிடித்து வர வேண்டியிருக்கிறது" என்று பேசினார். (26.8.1984 - 'சமஸ்கிருத தின'ப் பேச்சு) "இந்தியாவின் ஆதி மதமான இந்து மதம் தான் இந்திய ஒருமைப் பாட்டின் ஆணி வேராக இருந்து வருகிறது". 'தமிழ் மொழி எனது தாய்மொழி; ஆனால் இந்தியன் என்ற முறையிலே, இந்து என்ற வகையிலே சமஸ்கிருதம் எனது கலாச்சார மொழி' என்கிறார். (ஆதாரம்: ம.பொ.சி. எழுதிய 'தமிழும் சமஸ்கிருதமும்' நூல்)
- திருமணங்களில் இனமானத்தோடு புரோகித மறுப்பு சுயமரியாதை திருமணங்களை பெரியார் அறிமுகப்படுத் தினார். ம.பொ.சி.யோ "சமஸ்கிருத மொழியைப் பிழையறப் பயின்று வைத்துப் புரோகித தொழில் புரிவோர் இருப்பார் களாயின், அந்தப் புரோகிதர்களைக் கொண்டு, தமிழர் தங்கள் வீட்டுத் திருமணங்களைச் செய்வதை ஏற்கலாம்" என்றார். (ஆதாரம்: மேற்குறிப்பிட்ட அதே நூல்)
- தனது மணி விழா உட்பட தமது இல்ல நிகழ்ச் சிகள் அனைத்தும் 'வைதிகச் சடங்கு களுடனேயே' நிகழ்ந்தது என்று கூறும் ம.பொ.சி., சுயமரியாதை திருமணங்களை வெறுத்தார். திருமண வீடுகளில் சொற்பொழிவு நிகழ்த்துவது தேவையற்றது என்றார்.
- அப்பன் குலத் தொழிலை - பிள்ளை செய்ய வேண்டும் என்று தொடக்கப் பள்ளிகளில், ஆச்சாரியார் அறிமுகப்படுத்திய குலக் கல்வித் திட்டத்தை எதிர்த்து பெரியார், போர்க்கொடி உயர்த்தியபோது, அத் திட்டத்தை ஆதரித்து தமிழரசு கழக செயற்குழுவில் தீர்மானம் நிறை வேற்றினார், ம.பொ.சி. ராஜகோபாலாச்சாரியின் குலக் கல்வித் திட்டத்தை ஆதரித்து, நாடெங்கும், ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள், மாநாடுகள் நடத்த முன் வந்தார். 1953 ஆம் ஆண்டு செப்டம்பர் 6 ஆம் தேதி மாயவரத்தில் (மயிலாடுதுறை) குலக் கல்வி திட்டத்தை ஆதரித்துப் பேசியதற்காக ம.பொ.சி. தாக்கப்பட்டார்.
- நாடு முழுதும் திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடுகளை நடத்தியவர் ம.பொ.சி. அதில் பேசிய விபூதி வீரமுத்து, அனுகுண்டு அய்யாவு போன்ற பேச்சாளர்கள் மிகவும் தரம் தாழ்ந்து பெரியாரையும், அவரது கொள்கைகளையும் 'சாக்கடை' மொழியில் - ம.பொ.சி. முன்பாகவே பேசி வந்தனர்.
- இரயில் நிலையங்களில் பெயர்ப் பலகையிலுள்ள இந்தி எழுத்துகளை தார்பூசி அழிக்கும் போராட்டத்தை பெரியார் நடத்தியபோது, பெரியார் இயக்கத்தினர் அடித்த தார் மீது, மண்ணெண்ணெய் பூசி, தாரை அழித்து, 'இந்தி' ஆதரவை வெளிப்படுத்தியவர் ம.பொ.சி.

ம.பொ.சி. - பெரியாரின் பார்ப்பனிய - இந்திய தேசிய எதிர்ப்பை மடை மாற்றிட வந்த பார்ப்பன ஆச்சரியாரின் கைத்தடி; ராஜகோபாலாச் சாரிக்காகவே தட்சிண பிரதேச எதிர்ப்பைக் கைவிட்டவர்; 'திராவிட' இயக்கங்களை எதிர்க்கக் கிளம்பிய இவர், பிறகு திராவிட கட்சிகளின் ஆட்சிகளிலேயே பதவிச் சுகங்களை அனுபவித்தவர்; தி.மு.க. ஆட்சியில் மேலவை துணைத் தலைவராகவும், அ.தி.மு.க. ஆட்சியில் மேலவைத் தலைவராகவும் பதவி பெற்றவர்.

(ஆதாரங்கள்: கவிஞர் கருணானந்தம் எழுதிய
'தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு';
சுப. வீர பாண்டியன் எழுதிய
'பெரியாரின் இடதுசாரித் தமிழ்த் தேசியம்')

## திராவிட எதிர்ப்பு – பார்ப்பனிய ஆதரவே!

1907 ஆம் ஆண்டு, இந்தியாவெங்கும், ஆங்கிலேயர்களுக்கு எதிரான உணர்வுகளும், போராட்டங்களும் வெகுண்டு எழுந்தன. மராத்தியத்தைச் சேர்ந்த பாலகங்காதரத் திலக் அன்றைய தலைவராய்க் களத்தில் நின்றார். அக்காலகட்டத்தை மறுமலர்ச்சிக் காலம் என்று பலரும் கருதினர். ஆனால், நேருவோ, அதனை இன்னொரு கோணத்தில் நின்று விமர்சனம் செய்தார். விடுதலைப் போராட்டமேயானாலும், மதச் சார்புடைய ஒன்றை முற்போக்கானதாக ஏற்க முடியாது என்பது நேருவின் வாதம்.

“1907 இல் நிலவிய இந்திய தேசியப் புத்துணர்வு, மிக உறுதியாகப் பிற்போக்குத் தன்மை வாய்ந்தது - அது ஒரு மதவழித் தேசியம்” என்று தன் ‘சுயசரிதை’யில் நேரு கூறியுள்ளார்.(“ Socially speaking, the revival of Indian Nationalism in 1907 was definitely reactionary...was a religious nationalism “ - An Autobiography, p.24)

இந்திய தேசியப் புத்துணர்வுக்கு மட்டுமன்றி, இக்கூற்று, தமிழ்த் தேசியப் புத்துணர்வுக்கும் பொருந்தும்.

சிலம்புச் செல்வர், ம.பொ.சி., 1946 நவம்பரில், தமிழரசு கழகம் என்னும் கட்சியைத் தோற்றுவித்தார். தமிழ்த் தேசிய உணர்வும், அதன் உள்ளீடாக ஆங்கில எதிர்ப்பும் அக்கழகத்தின் நோக்கங்களாக இருந்தன. எனினும் அது வெறும் தமிழ்த் தேசிய உணர்வாக அல்லாமல், திராவிட இயக்க எதிர்ப்புத் தமிழ்த் தேசிய உணர்வாக இருந்தது. அதனால்தான் 1950 - 51 இல், தமிழகம் முழுவதும் திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடுகளை, ம. பொ.சி நடத்தினார். அம்மாநாடுகளில் விபூதி வீரமுத்து, அணுகுண்டு அய்யாவு போன்றோர், திராவிட இயக்கம் குறித்தும், அதன் தலைவர்கள் குறித்தும் மிகத் தரக்குறைவாகப் பேசியுள்ளனர். அம் மாநாடுகளுக்குக் கள்ளக்குறிச்சி வழக்குரைஞர் தாத்தாச்சாரி போன்ற பணக்காரப் பார்ப்பனர்கள் நிதியுதவி செய்துள்ளனர்.

திராவிட இயக்க எதிர்ப்பு என்பது, பெரியாரையோ, திராவிடர் கழகத்தையோ எதிர்ப்பது எனப் பொருள் கொள்ள முடியாது, பார்ப்பனிய ஆதரவே திராவிட இயக்க எதிர்ப்பாக வெளிப்பட்டுள்ளது. இதனை ம.பொ.சி. அவர்களே, ‘நானறிந்த ராஜாஜி’ என்னும் நூலில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

“தமிழ்நாட்டிலே ஒரு சாரார், பிராமணர் தமிழர் அல்லர்; தமிழருக்கு அந்நியரான ஆரியரே என்று பிரச்சாரம் செய்தது, தலைவர் ராஜாஜிக்கு மிகுந்த வேதனையைத்தந்தது. பிராமணர் - பிராமணரல்லாதார் என்னும் வேற்றுமையைப் போக்குகின்ற குறிக்கோளுடன்தான், தமிழர் என்ற இன உணர்ச்சியை நான் வலியுறுத்துகின்றேன் என்பதில் ராஜாஜிக்கு ஐயமிருக்கவில்லை” (பக்.350)

என்பது சிலம்புச் செல்வரின் கூற்று. ராஜாஜிக்கு மட்டுமின்றி, நமக்கும் எந்த ஐயமும் எழ இடமில்லாமல் ம.பொ.சி. தன் நிலையை விளக்குகின்றார்.

தமிழர் என்ற இன உணர்ச்சியைத் தான் வலியுறுத்துவது, பிராமணர் - பிராமரல்லாதவர் என்னும் வேற்றுமையைப் போக்குவதற்காகத்தான் என்பதனை, இதனைவிடத் தெளிவாக எப்படி விளக்க முடியும்?

தன் நூல்களில் இன்னும் பலவிடங்களிலும் இக்கருத்தை ம.பொ.சி. கூறியுள்ளார்.

“தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள், மதத்தால் இந்துக்களாக இருப்பார்களானால், அவர்கள் தங்கள் வேத மொழியான சமஸ்கிருதத்தை வெறுப்பது முறையோ, நெறியோ ஆகாது” (‘தமிழும் சமஸ்கிருதமும்’ - பக்.19) என்கிறார் ம.பொ.சி. தமிழனுக்குத் தாய்மொழி தமிழாக இருந்தாலும், வேதமொழி சமற்கிருதமாகத்தான் இருக்க வேண்டும் என்பது அவருடைய கருத்து.

சிலம்புச் செல்வரின் தமிழ்த் தேசியமும், பார்ப்பனீயமும் இப்படியாகக் கைகோத்து நடக்கின்றன.

திராவிட இயக்கக் கோட்பாடுகளை எதிர்த்துக் கொண்டே, தமிழ்த் தேசியம் பேசும் எவரும், எந்த அமைப்பும், பார்ப்பனீயத்திற்கு ஆதரவாகத்தான் ஆகிவிடுவர் என்பதற்குச் சிலம்புச் செல்வரே சிறந்த சான்று!

**(கருஞ்சட்டைத் தமிழர் அக்டோபர் 1, 2010)**

## வடநாட்டுச் சுரண்டல் தடுப்புப் போர்

'வடநாட்டுச் சுரண்டல் தடுப்புப் போர்' என்னும் பெயரில், பார்ப்பன - பனியா எதிர்ப்புப் போரைத் தந்தை பெரியார் தொடங்கினார். மார்வாரிகள் தமிழ்நாட்டின் பொருளாதார வளத்தைச் சுரண்டுவதைத் தடுப்போம் என்பது முதன்மையான முழக்கமாக இருந்தது.

சென்னை ஆரியபவன் சிற்றுண்டிச்சாலை, செல்லாராம் துணிக்கடை ஆகியனவற்றின் முன், அன்று மாலை மறியல் தொடங்கியது. அது ஒரு வேறுபட்ட போராட்டம். ஆயிரக்கணக்கானவர்கள் ஒன்று திரண்டு போராடுவதில்லை. தினந்தோறும் எட்டு அல்லது பத்துப்பேர் மட்டும், கடைவாசலில் கைகூப்பி நின்றபடி, மார்வாரி கடைகளைப் புறக்கணியுங்கள் என்று அக்கடைக்கு வரும் மக்களைக் கேட்டுக் கொள்வதும், துண்டறிக்கைகள் கொடுப்பதும். அவ்வளவுதான்.

முதலில் 'இது ஒரு பெரிய போராட்டமா?' என்றுதான் மார்வாரிகள் கருதினர். ஆனால் இப்போராட்டம் மாதக் கணக்கில் தொடர்ந்து நடந்தபோது. அதன் பாதிப்பை அவர்கள் உணர்ந்தனர். 'பெரிய நியுசென்சாகப் போய்விட்டது' என்று அவர்களே பிறகு கூறினர். 'அந்தக் கடைக்குப்போனால், கடை வாசலில் பிரச்சினையாக இருக்கும், வேறு கடைக்கே போய்விடலாம்' என்று மக்கள் கருதத் தொடங்கியபோது, வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையும், வருமானமும் குறைந்தது.

மார்வாரிகள், காவல்நிலையம் சென்றனர். மறியல் செய்பவர் களைக் கைது செய்ய வேண்டும் என்றனர். காவல்துறையும், திராவிடர் கழகத் தோழர்களைக் கைது செய்தது. டார்பிடோ ஏ.பி.ஜனார்த்தனம் உள்ளிட்ட 8 பேர் முதலில் கைது செய்யப்பட்டனர். எனினும், அவர்கள் மீது பெரிய வழக்கு எதனையும் தொடுக்க இயலவில்லை. போராட்ட வீரர்கள், எந்த வன்முறைச் செயலிலும் ஈடுபடவில்லை. யாரையும் கைநீட்டி மறிக்கவில்லை. குறுக்கே படுத்துத் தடுக்கவில்லை. வெறுமனே, கைகூப்பி வேண்டுகோள் விடுத்தனர். இதற்கென்ன வழக்குப் போடுவது?



மூன்று மணி நேரம் காவல் நிலையத்தில் உட்கார வைத்தபின், நிபந்தனையின்றி விடுதலை செய்துவிட்டனர்.

ஒவ்வொரு நாளும் இதே நிகழ்வுகள் அரங்கேறின. மாலை 5 மணியானால், தொண்டர்கள் கடை வாசலுக்கு வந்துவிடுவர். காவல்துறை 6 மணிக்கு வந்து கைது செய்யும். 9 மணிக்கு விட்டுவிடும். பார்ப்பனர்களாலும், மார்வாரிகளாலும் இதனைச் சகிக்க முடியவில்லை. ஏதேனும் செய்தே ஆக வேண்டும் என்று உள்ளுக்குள் உறுமினார்கள். 'இது என்ன பைத்தியக்காரத்தனம்' என்று எழுதியது ஆனந்தவிகடன்.

தீபாவளி நெருங்கியது. மற்ற எல்லாக் கடைகளிலும் விற்பனை பெருகிக்கொண்டே இருந்தது.

09.11.1950 அன்று மாலை, புகழ்பெற்ற வழக்கறிஞர் ரங்கசாமி அய்யங்கார் தன் குடும்பத்துடன், செல்லாராம் மார்வாரிக் கடைக்குத் துணி எடுக்க வந்தார். அவரிடமும் தி.க.தோழர்கள் நெருங்கிச் சென்று, தங்கள் வேண்டுகோளை வைத்து, துண்டறிக்கைகள் கொடுத்தனர்.

"சீ...நாயே, கையை நீட்டாதே" என்றார் ரங்கசாமி அய்யங்கார். பட்டென்று பற்றிக்கொண்டது போராட்டம். பார்ப்பனத் திமிர் அந்தப் போராட்ட நெருப்பிற்குப் புது எண்ணை வார்த்தது.

அடுத்தநாள் முதல் பெண்கள், கைக் குழந்தைகளோடு வந்து மறியலில் கலந்து கொண்டனர். பத்துப் பேருக்கு மேல், ஒரே நாளில் கலந்து கொள்ளக்கூடாது என்று தடுப்பது பெரும் பாடாகி விட்டது. வேறு வழியின்றி, முதல் 10 பேர் கைதானவுடன், அடுத்த 10 பேர் களத்திற்கு வந்தனர். அலை அலையாகத் தோழர்கள், ஆண்களும், பெண்களுமாய் வந்தபடி இருந்தனர்.

"வடமாநிலங்களுக்கு இனிமேல் நூல் ஏற்றுமதியைத் தடை செய்ய வேண்டும்" என்றார் வரதராஜுலு நாயுடு.

எதிர்பாராத விதமாக, இன்னொரு மூலையிலிருந்து இப்போராட்டத்திற்கு ஆதரவு கிளம்பியது. சேலம், ஈரோடு பகுதியைச் சேர்ந்த நெசவாளர்கள், மார்வாரிக் கடை மறியலுக்கு ஆதரவு தெரிவித்தனர். பேரணியாய்ப் புறப்பட்டுச் சென்னை சென்று, தாங்களும் மறியலில் கலந்துகொள்ளப்போகிறோம் என்று அறிவித்தனர். நாடக விரைவில் காட்சிகள் அரங்கேறின.

**மார்வாரிகளுக்கு ஆதரவாய்த் திடீரென்று கிளம்பியது ஒரு 'தமிழ்க்குரல்'. அது தமிழரசுக் கழகத் தலைவர், சிலம்புச் செல்வர் ம.பொ.சி.யின் குரலாக இருந்தது. மார்வாரிகளை எதிர்க்கும் திராவிடர்களை நாம் எதிர்க்க வேண்டும் என்றார் அவர். அப்படிக் கூறியதோடு நில்லாமல், 19.11.20 அன்று, வடசென்னைப் பகுதியில் பெரிய பொதுக்கூட்டம் ஒன்றையும் கூட்டினார். அதில் பெருந்தலைவர் காமராசரையும் கலந்து கொள்ள வைத்தார்.**

அடுத்தநாள் (நவம்பர் 20) செய்தித்தாள்களில், 'காமராசர், கிராமணியார் கூட்டத்தில் கூச்சல், குழப்பம்' என்று செய்தி வந்துள்ளது. ஏன் தெரியுமா? ம.பொ.சி.யின் பேச்சே அதற்கு வித்திட்டிருந்தது.

**"மார்வாரிகளின் கடை முன்னால் மறியல் செய்து, அவர்களின் வணிகத்தைக் கெடுப்பது என்ன நியாயம்? இனியும் தொடர்ந்து மார்வாரிக் கடைகள் முன்னால் மறியல் நடந்தால், திராவிட வியாபாரிகள் கடைகள் முன்னால் நாம் மறியல் செய்வோம்" என்று அவர் பேசியபோதுதான், கூட்டத்தில் எதிர்க்குரல் எழும்பியிருக்கிறது.**

அந்தக் கூட்டத்தில்தான், சினத்தின் நுனிக்கொம்பு ஏறிய சிலம்புச் செல்வர், "இனிமேல் திராவிட இயக்கத்தை ஒழிப்பதே என் வேலை" என்று சபதம் செய்தார். அதனை நிறைவேற்று வதற்காகவே, 1951 ஆம் ஆண்டு முழுவதும், தமிழ்நாடெங்கும், 'திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடுகளை' அவர் நடத்தினார். அக்கூட்டங்களில், விபூதி வீராசாமி, அனுகுண்டு அய்யாவு போன்றவர்களைக் கொண்டு, தந்தை பெரியாரையும், திராவிட இயக்கத்தையும் கொச்சைப்படுத்திப் பேச வைத்தார்.

பிற்காலத்தில், 'உதயசூரியன்' சின்னத்திலேயே அவர் போட்டியிட்டதும், தி.மு.கழக அரசில் பதவிகள் பெற்றதும் வேறு கதை.

பார்ப்பன ஆதரவு மட்டுமின்றி, மார்வாரி ஆதரவும், திராவிட இயக்க எதிர்ப்பாக உருக்கொண்டு எழுந்துள்ளதை இந்நிகழ்வுகள் நமக்கு உணர்த்துகின்றன.

**(கருஞ்சட்டைத் தமிழர் நவம்பர் 1, 2010 )**



# 'பெரியாரின் இடதுசாரித் தமிழ்த்தேசியம்' நூல்

தமிழரசுக்கழகம் வெறும் அரசுரிமையை வற்புறுத்துவ தோடு நின்றுவிடப்போவதில்லை. கழகம் விரும்புவது சுதந்திரத் தமிழகத்தில் சோசலிசக்குடியரசு. சுதந்திரம் - சுயநிர்ணயம் - சோசலிசம் ஆகிய மூன்றும் பிரிக்க முடியாதவாறு ஒன்றோ டொன்று பிணைந்திருக்கின்றன என்றே கழகம் கருதுகிறது.

பிரிட்டிஷ் திட்டத்திலேயே மாநிலங்கள் சுதந்திர உறுப்புகளாக அங்கீகரிக்கப்பட்டு, அவைதாமே விரும்பிக்கலந்த மத்திய சமஷ்டியே பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அதனாற்றான், கழகத்தின் கொள்கைகளிலே 'தமிழகத்தைச் சுதந்திர நாடாகச் செய்வது' என்னம் வாசகம் இடம்பெற்றது. ' இந்தியாவிலிருந்து பிரிந்துவிட்ட தமிழகம்' என்னும் பொருளில் அல்ல.

மத்திய சமஷ்டியிலிருந்து பிரிந்துவாழ மாநிலங்களுக்கு உரிமை இருக்கவேண்டுமென்று நான் வற்புறுத்தியது, இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு - இந்திய அரசியல் சட்டம் உருவாவதற்கு முன்புதான்; காங்கிரஸ் மகாசபையும் அதனை ஒத்துக்கொண்டபோதுதான். ஆனால், சுதந்திர இந்தியாவின் அரசமைப்புச்சட்டம் நடைமுறைக்கு வந்தபின்னர் நிலைமை மாறிவிட்டது. அதனால் பிரிந்து வாழும் உரிமையை நான் வற்புறுத்தவில்லை.

தேசிய ஒருமைப்பாட்டைக்கருதியேனும், இந்துக்கள் - குறிப்பாகத் தமிழகத்தார் இந்து மதத்தை உறுதியாகக் கடைபிடித்து வரவேண்டியிருக்கிறது.

இந்தியாவில் இஸ்லாம், கிறிஸ்துவ மதங்களும் இருக் கின்றன. அவையும் இந்திய மதங்களாகிவிட்டன வென்றாலும்,

இந்தியாவின் ஆதி மதமான இந்துமதந்தான் இந்திய ஒருமைப் பாட்டின் ஆணிவேராக இருந்து வருகிறது.

அண்மையில் கள்ளக்குறிச்சி சென்றிருந்தபோது, ஒரு செய்தி கிடைத்தது. 1951 ஆம் ஆண்டு, அந்த ஊரில், தமிழரசுக்கழகம் சார்பில் நடைபெற்ற ‘ திராவிட இயக்க எதிர்ப்பு மாநாட்’ டிற்கான பெரும்பான்மைச் செலவை, அவ்வூரைச் சேர்ந்த தாத்தாச்சாரி என்னும் பார்ப்பன வழக்குரைஞர் ஏற்றுக்கொண்டார் என மு.அந்தலனார் கூறினார்.

தமிழ்மொழியை எனது தாய்மொழியாகக் கருதுகிறேன், அது என் வாழ்க்கை மொழியாக அமைந்துவிட்டதால், ‘ இந்தியன்’ என்ற முறையிலே, ‘இந்து’ என்ற வகையிலே சமஸ்கிருதம் எனது கலாச்சார மொழியாக இருந்து வருகிறது.

மந்திரங்களைக் கொண்ட மொழியாதலால், அதனைத் தேவமொழி என்று சொல்வது வழக்கமாகிவிட்டது. இதை, தெய்வபக்தியும், மதப்பற்றும் உடைய இந்துக்கள் மறுத்து வாதிடத் தேவையில்லை.

தமிழைத் தாய் மொழியாகக்கொண்டவர்கள் மதத்தால் இந்துக்களாக இருப்பார்களானால்...அவர்கள் தங்கள் வேத மொழியான சமஸ்கிருதத்தை வெறுப்பது முறையோ, நெறியோ ஆகாது.

“இப்பொழுதெல்லாம் திருமணங்களிலே ஒரு புது வழக்கம் தோன்றியுள்ளது. அது, திருமண இல்லத்தில் பிரமுகர்கள் சொற்பொழிவு நிகழ்த்துவதாகும். என் குடும்பத்தில் நான் பொறுப்பேற்று நடத்திய திருமணங்களில் பிரமுகர்களைக் கொண்டு சொற்பொழிவு நிகழ்த்தச்செய்ததில்லை.”

“திரமணங்களிலே யான் நிகழ்த்திய சொற்பொழிவுகளைக் கேட்ட நண்பர்கள், என் கருத்துகள் நூல்வடிவம் பெற்றால் பிறருக்குப் பயனுடையதாக இருக்கும் என்று என்னை வற்புறுத்தி னார்கள். அதன் விளைவாகவே இந்நூல் வெளிவருகின்றது.



சமயத்துறையிலே நானம் பெரியாரும் சந்திக்க முடியாத இருவேற துருவங்களாக இருந்தோம். அது காரணமாகவே அவருடைய வாழ்நாள் முழுவதிலும், அவரோடு எந்த நேரத்திலும், எந்த ஒரு பிரச்சனையிலும் நான் ஒன்றுபட்டுச் செயலாற்ற முடியாதவனாக இருந்து வந்தேன்.

“இந்தி ஒழிக என்று எதிர்ப்பாளர்கள் கோஷித்தார்கள் என்றால், இந்தி வாழ்க என்று ஆதரவாளர்களான காங்கிரஸ் காரர்கள் கோஷித்தனர். இதனால் தமிழ்ப்பற்றுடைய என் போன்ற காங்கிரஸ்காரர்களுடைய நிலைமை தரமசங்கட மாக இருந்தது. காங்கிரஸ்காரர்கள் என்ற வகையில், இந்திதான் இந்தியாவின் பொதுமொழி என்பதனை நாங்கள் ஏற்றுக் கொண்டிருந்தோம்.”

“இந்தி எதிர்ப்புக்கு எதிர்ப்புக் காட்டும் அரசியல் பிரச்சாரத்திலே நான் எல்லை கடந்து உற்சாகம் காட்டினேன்.”

“ இந்திய ஒருமைப்பாட்டை உண்மையிலேயே விரும்பும் தமிழர் எவரும் இந்தி மொழியில் ஞானம் பெற வேண்டியதன் அவசியத்தை மறுப்பதற்கில்லை. மொழிவேறுபாடுடைய பல்வேறு மாநிலங்களின் மக்கள் பரஸ்பரம் கலந்து பழகி ஒருமைப் பாடு எய்துவதற்கு இந்தி ஒன்றுதான் சிறந்தமொழி என்பதனை என்றுமே நான் மறுத்ததில்லை.”

தமிழகத்துப் பள்ளிகளுக்கான பாடத்திட்டத்தில் இந்தி மொழிக்கும்இடம்அளித்தாகவேண்டிய அவசியம்ஏற்பட்டிருக்கிறது”

“இந்தியாவின் தேசிய ஐக்கியம் வலுப்பெறுவது இந்தியை ஆட்சியாக்குவதில் இல்லை. குமரி முதல் இமயம் வரையுள்ள மக்கள் எல்லோரும் இந்தியைப் பயின்று தேர்ச்சி பெறுவதில்தான் இருக்கிறது.”

தனித்தமிழ் பற்றாளராக இருந்த சுப்பிரமணியசிவா, 1915 ஆம் ஆண்டு தன்னுடைய ‘ஞானபானு’ ஏட்டில் சமஸ்கிருதம் கலவாத தனித்தமிழ்ச் செய்திப் போட்டி நடத்தியதைக்கூட ம.பொ.சி கண்டிக்கிறார்.

“இந்த விளம்பரத்திலே ‘சமஸ்கிருதம் முதலிய அந்நிய பாஷைச்சொற்கள்’ என்று சிவம் குறிப்பிட்டிருப்பது சிந்தனைக் குரியதாகும். சிவம் ஆசாரத்தில் அந்தணர். ஆன்மீகத்தால் வேதாந்தி, கொண் கோலத்தால் துறவி. இப்படியிருந்தும் அந்த வருணத்தவர் போற்றும் சமஸ்கிருத மொழியினை அவர் அந்நிய மொழி என்று குறிப்பிட்டிருப்பது நமக்கு வியப்பைத் தரும். கலாச்சாரத்துறையிலே இந்திய மொழிகளையெல்லாம் - பிணைக்கும் பொது மொழி சமஸ்கிருதம். அன்று மட்டுமல்ல, இன்றுங்கூடத்தான்.

“சமஸ்கிருதக்கல்லூரி மற்றும் சமஸ்கிருதம் தொடர்பான நிறுவனங்களுக்கு தமிழக அரசு நிதி உதவி உட்பட போதிய உதவிகள் செய்துதர வேண்டும்”

ஈழமக்களுக்கு எதிராக, இராஜீவ்காந்தி அனுப்பிவைத்த அமைதிப்படையை ஆதரித்தும், போற்றியும் தமிழகம் முழுவதும் ம.பொ.சி கூட்டங்களில் பேசினார். “ சிங்களத் தீவினக்கோர் பாலம் அமைப்போம் என்று பாரதியார் பாடினார்.... அந்தக் குறையை இந்திய - இலங்கை உடன்படிக்கை மூலம் தீர்த்து விட்டார் பிரதமர் இராஜீவ்காந்தி. ஆம். இந்த உடன்படிக்கையே பாலமாகிவிட்டது” என்று இராஜீவ் புகழ் பாடினார்.

தமிழரசுக்கழகம் தேசப்பிரிவினையை எந்த வடிவத்திலும் ஏற்றதில்லை. அதனாற்றான், திராவிட நாடு வேண்டாம், தனித் தமிழ்நாடு வேண்டும் என்று கூறும் தி.க, நாம் தமிழர் இயக்கங் களையும் தமிழரசு கழகம் எதிர்க்கின்றது. உடனடிப்பிரிவினை வேண்டாம். அவசியமானால் பிரிந்து வாழ உரிமை வேண்டும் என்று கூறும் த.தே.க. விடமும் ( ஈ.வெ.கி. சம்பத்தின், தமிழ் தேசியக் கட்சி ) கருத்து வேற்றுமை கொண்டிருக்கிறது கழகம்”

ஆதாரம் : பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களின்
‘பெரியாரின் இடதுசாரித் தமிழ்த்தேசியம்’ நூல்